ஹம்ஸாநந்தி

★

உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
433
கலைக்காட்சிக் குழு
சென்னை

ஆசிரியர் :
நாரண துரைக்கண்ணன்
"ஜீவா"

ஜீவோதயம் பிரசுரம்
சௌராஷ்டிர நகர் :: சென்னை-24.

முதல் பதிப்பு—1952ஆம் ஏப்ரலில்

விலை ரூபாய் 1-4-0

அச்சிட்டது:
மீனாட்சி அச்சகம், சென்னை-24.

00708

பதிப்புரை

—(*)—

பிரசித்தி பெற்ற கதாசிரியர் "ஜீவா" அவர்களால் எழுதப்பட்ட சிறந்த நான்கு சிறு கதைகள் இக் கதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. "உடன் பிறந்தவள்" என்ற கதை கவின் கலைப் பத்திரிகையான 'ரவிகன்' ஆண்டு மலரிலும் (1951), 'தாயின் சிலை' என்ற கதை 'அமுதசுரபி' மலரிலும் (1950), 'ஹம்ஸா நந்தி' 1942-ம் ஆண்டில் வெளிவந்த 'பிரசண்ட விகடன்' பொங்கல் மலரிலும் வெளிவந்தவையாகும். 'தந்தையின் வஞ்சம்' என்ற கதை அகில இந்திய ரேடியோ வாயிலாக 1948-ம் ஆண்டில் கடல் கடந்த நாடுகளில் வாழும் மக்களுக்கு ஒலி பரப்பப்பட்டது. பின் அது 'அமுதசுரபி' மலரிலும் வெளியாயிற்று.

இவ்விதம் பிரபல பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் வெளியாகி மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து பிரசித்தி பெற்ற இச் சிறுகதைகளைத் தொகுத்து, நூல் வடிவில் தமிழ் மக்களிடையே வழங்குவதில் நாம் பெருமைபடைகிறோம். இது போன்றே, 'ஜீவா' அவர்களின் சிறு கதைகளையும் நாவல்களையும் கட்டுரைகளையும் தொடர்ந்து வெளியிட்டு வருவோம் என்று இச்சமயத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பதிப்பகத்தார்.

உள்ளுறை

எண்.			பக்கம்.
1.	உடன் பிறந்தவள்	....	5
2.	தாயின் சிலை	....	22
3.	தந்தையின் வஞ்சம்	....	46
4.	ஹம்ஸாநந்தி	....	62

உடன் பிறந்தவள்

"அம்மா, அக்கா வரல்லேயாம்மா, இன்னம்?"

"இல்லே, அகல்யா! வந்துடுவா சிக்கிரம்...."

"நான் கேக்கறப்போல்லாம் இப்பிடித்தான் சொல்றே! ஆனா, அக்காவைத்தான் வரக்காணோம்......."

கோமதியம்மாளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. நீர் கொண்ட கண்களை முந்தானையால் துடைத்தவாறு நின்றுகொண்டிருந்தாள். இவளுடைய சோகக் குமுறல் சூழ்ந்திருந்த மற்றவர்களையும் கண்கலங்க வைத்தது.

படுக்கையில் நிலைகொள்ளாது புரண்டுகொண்டிருந்த அகிலை மீண்டும் மெல்லிய குரலில், "என் அம்மா! ஒரு வேளை நீ இன்னம் சொல்லியனுப்பலியோ? நான் நோயாயிருக்கிறேன்னு தெரிஞ்சிருந்தா அக்கா வராமே இருக்கமாட்டாளே!......." என்றாள். ஒவ்வொரு வார்த்

தையும் மிகச் சிரமத்துடன் அவள் வாயிலிருந்து வெளி வந்தது.

"என்ன அகல்யா, அப்பிடிச் சொல்றே? அம்மா ஜானகிக்குத்தான் முதல்லே தகவல் சொல்லியனுப்பிச் சாங்க. நேற்றுகூட கேசவன் போய்ச் சொல்லிட்டு வந்தான்...."

அகலிகையின் மாமியார் பதில் சொன்னாள்.

"அப்படியா?" என்று அகலிகை சில விநாடிகள் மௌனமாயிருந்து, "அக்காவுக்கு என்மேலே என்ன கோபமோ? உம், நான் என்னதான் தப்பு செய்திருந்தாலும் சாகப்போகிற என்னிடம் க்ஷாத்திரம் கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

மீண்டும் அவள், "அக்காவை பாக்கணுமுன்னு கண்ணிலேயே இருக்கு. ஒரு தடவை அக்கா முகத்தைக் காட்டிட்டுப் போனா நிம்மதியா என் உசிர் போகும்........" என்றாள்.

இம்மொழி அவள் தாய், மாமி, சகோதரிகள் முதலிய எல்லோரையும் கதற வைத்துவிட்டது.

"என்னதான் இருந்தாலும் ஜானகிக்கு இவ்வளவு கல் மனசு ஆகாது. கூடப் பிறந்தவ இப்பிடி சாகப் பிழைக்கக் கிடக்கிறாள் என்று கேட்டுங்கூட....."

"ஆமாம், இவங்களுக்குள் என்ன? அவ்வளவு அன்யோன்யமா யிருந்தாங்களே"

"இவங்களேப்போல ஒத்துமையா, ஒருத்தர்மேல் ஒருத்தர் உசிரா அக்கா தங்கைகள் இருந்ததை நான் எங்கும் பார்த்ததில்லே........"

"அதான் கண் திருஷ்டி பட்டுட்டாப் போலே இருக்கு……"

"இவங்களுக்குள் என்ன சண்டையாம்….?"

"அது என்ன மனஸ்தாபமோ தெரியல்லே."

"ஆத்தாக்காரி பாடுதான் அல்லாட்டமா இருக்கு. இந்தப் பக்கம் பாத்தா சின்ன பொண்ணு சாகக் கிடக்கு. அந்தப் பக்கம் பாத்தா பெரிய மக பிடிவாதமா இருக்கிறா. யாருக்குன்னு சொல்றது? சொல்லவும் முடியாமெ மெல்லவும் முடியாமெ குமுறுறாங்க; கோமதியம்மா, பாவம்!"

அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்டிர் தங்களுக்குள் வம்பளந்து கொண்டிருந்தனர்.

"பாவம் நல்ல நாளும் தீபாவளியுமா பொண்ணு படுக்கையா போயிட்டது, பாரு!"

"அகல்யா இருக்கிற இருப்பைப் பார்க்க…."

"ஆமா, ஆமா; அம்மாவாசையைத் தள்ளிட்டா அப்புறம் அவளுக்குக் கல்லால் அடிச்சாலும் சாவில்லே. அந்த கேதாரியம்மாதான் கண் திறந்து பாக்கணும்."

"சும்மா இருக்கமாட்டீங்க?….பாவம், முன்னமே கோமதி இடிஞ்சு போயிருக்கிறா. நீங்க வாயிலே வந்தபடி உளறுகிறதைக் கேட்டா இன்னம்…."

"அகல்யாவுக்கு ஒண்ணுமில்லே. நான் சொல்றேன், நீங்க வேணுமின்னு பாருங்களேன்…."

"அதுதான் வேணும்."

கோமதியம்மாள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்டிர் சிலர் இப்படிப் பேசிக்கொண்டனர்.

கோமதியம்மாள் அகலிகைக்கு ஆறுதல் சொல்லிய வாறே கோதுமை தவிட்டை ஒத்தடம் கொடுத்துக்கொண் டிருந்தாள்.

அகலிகைக்கு டைபாயிட் சுரம் மிகக் கடுமையாகி பிழைப்பாளோ மாட்டாளோ என்ற சந்தேக நிலையில் இருக்கிற செய்தி பட்டணத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கும் ஜானகிக்கு எட்டியது. செங்கல்பட்டிலிருந்து வந்த சொந்தக்காரர்கள் அவளுக்கு அகலிகையின் அசௌக்கிய நிலையைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னார்கள். அத்துடன் அவள் ஜானகியின் மீதே நினைவாக இருப்பதையும் உருக்கமாக எடுத்துக் கூறினர்.

“ஜானகி, நாங்க சொல்றதைக் கேள். நீ உடனே புறப்பட்டுப் போய்ப் பார்த்துத்தான் ஆகணும். உன்னைக் கண்ட பூரிப்பிலே அவ பிழைச் செழுந்தாலும் எழுந் திடுவா. உன் மேலே உசிரையே வைத்திருக்கிறா. உன்னை விட்டா அவளுக்கு யார் ஆதரவு? பாவம்; அவ முன்னயே மனம் நொந்து கிடக்கிறா. அத்தோட, உடன் பிறந்த நீயும் அவ மேலே க்ஷாத்திரமா யிருந்தா—அதுவும் சாகக் கிடக் கிற சமயத்திலே கூட—அவளுக்கு எப்படி இருக்கும்?...”

வைராக்கியமா யிருந்த ஜானகியின் மனமும் சலன முற்றது. ஆனால், இடையில் எழுந்த நினைவுகள் இளகிய நெஞ்சத்தை முன்னைவிட இறுக்கமுறச் செய்தன. ‘அவள் என் உடன் பிறந்தவளா? அவளா?’ என்று அவள் வாய் முணுமுணுத்தது. “அவள் உன் சகோதரி யல்லாமல் வேறு யார்?’ என்று அக மனம் அவளை அதட்டிக் கேட் டது. அந்த அதட்டலில் அறிவறிந்த நாளிலிருந்து அவளு

அகலிகையுடன் அளவளாவிய பழம் நினைவுகள் பிரதி பலித்தன.

2

ஜானகியும் அகலிகையும் ஒரே வயிற்றில் பிறந்த சகோதரிகளாக மட்டுமல்லாமல் அதற்கு மேற்பட்ட அணுக்க உறவுடைய சிநேகிதைகளாகவும் பழகிவந்தனர். அவர்களுடன் பிறந்த சகோதரி சகோதரர்கள் ஏராளமாக இருந்தாலும், இவர்கள் இருவர் மட்டும் அதிகம் பாசமும் நேசமும் கொண்டு இணைபிரியாமல் இருந்து வந்தனர். இவர்கள் இவ்விதம் அன்பாயிருப்பதைக் கண்டு 'ஜானகியையும் அகல்யாவையும் ஒருத்தனுக்கே கட்டிக்கொடுத்து விட வேண்டும்' என்று தமாஷ் செய்வார்கள் உறவினரும் மற்றவர்களும். 'சிறுசில் இப்படித்தான் இருப்பார்கள். ஆம்படையான் வீட்டுக்குப் போய்விட்டார்களானால், அப்புறம் ஒருத்தரை யொருத்தர் கவனிக்கக்கூட மாட்டார்கள்' என்று சிலரும், 'அவ்வளவு கூட வேண்டாம். கலியாணம் என்று ஏற்பட்டு, அப்பா அம்மா அவரவர்களுக்கு துணி மணி, நகை நட்டு வாங்கிக்கொடுத்து, சீர்செனத்தி செய்யத் தொடங்கட்டும். அப்புறமே பூசல் தொடங்கிவிடுவார்கள், 'அவளுக்கு மட்டும் அந்த நகை வாங்கிக் கொடுத்திங்களே! எனக்கு ஏன் வாங்கித் தரல்லே?' 'அக்கா உடுத்தியிருக்கிற மாதிரி இல்லே எனக்குக் கொடுத்த புடவை?' 'என்ன இருந்தாலும், சீர் வரிசை யெல்லாம் அகல்யாவுக்குத்தான் ஜாஸ்தி' என்று...' என்று சிலரும் ஜோஸ்யம் கூறினர்.

இவர்கள் எதிர்பார்த்தபடி, சகோதரிகள் போக்கில் எள்ளளவு மாறுதலும் ஏற்படவில்லை. அவர்கள் வயதும்

அறிவும் வளர்ந்ததுபோல, அன்பும் ஒற்றுமையும் வளர்ந்து
வந்தன. ஜானகி பட்டணத்தில் பணக்காரக் குடும்பத்தில்
வாழ்க்கைப்பட்டாள். ஆனாலும் அவள் அகலிகையை
மறக்கவேயில்லை. அவள் தன் கணவனைக் கொண்டு,
பொதுவாகத் தாய் வீட்டுக்கு உதவி செய்து வந்தாலும்,
அகலிகைக்குப் பிரத்தியேகமாக, துணி மணி முதலியவை
களைக் கொடுத்து வந்தாள். ஜானகிக்கு கலியாணம் நடந்த
இரண்டாவது வருஷத்திலேயே அகலிகைக்கும் திருமணம்
கூடிவிட்டது. ஆனால் திருக்கழுக்குன்றத்தில் சப் ரிஜிஸ்டி
ரார் ஆபீஸில் குமாஸ்தா வேலை செய்யும் பிள்ளைக்குத்தான்
அகலிகை வாழ்க்கைப்பட நேர்ந்தது. தன் தங்கை புகுந்த
அகம் ஏழை விவசாயிக் குடும்பம் என அறிந்ததும் ஜானகி
யின் அனுதாபமும் அன்பும் அகலிகை மீது இன்னும்
அதிகமாய்விட்டது. கலியாணத்தின்போது அவள் சகோ
தரி என்ற முறையில் செய்த சீர் வரிசைகளை விட, அதன்
பின்னரும் அவள் கணவனுக்குத் தெரிந்தும் தெரியாமலும்
பலவகையான உதவிகளைச் செய்து வந்தாள். பெற்றோர்
செய்வதைவிட, உடன் பிறந்தவள் இவ்வளவு கனிகரமாக
உதவி செய்வதைக் கண்டு, அகலிகையின் மாமியார்
வீட்டார்கூட மகிழ்ந்து போயினர்.

மூன்று நான்கு வருஷத்தில் தான் இரண்டு பிள்ளை
களுக்குத் தாயாகியிருந்தும், ஜானகி அகலிகை கர்ப்பமுற்
றிருக்கிறாள் என்று தெரிந்ததுமே ஐந்தாம் மாசம், பூச்சூடு
வதற்கும் வளை சாப்பிடுவதற்கும் முன்பே, அவளுக்குப்
பலகார பட்சணங்கள் செய்து போட்டாள்; துணிமணிகள்
எடுத்துக் கொடுத்தாள்.

இவ்விதம் தாயைவிட, தமக்கையின் அன்பும் ஆதர
வும் பெற்ற அகலிகைக்கு வாழ்க்கைப்பேறு சரியாக வாய்க்

காயல் போய்விட்டது. அவளுக்குச் சீமந்தம் செய்து தாய் வீட்டுக்கு அழைத்து வந்த அதே மாதத்தில், சிறிதும் எதிர்பாராதவாறு அவள் கணவன் காலராவினால் மரணமடைந்துவிட்டான். இப்பேரிடியை அகலிகை கூட ஒரு விதமாகத் தாங்கிக் கொண்டாள். ஆனால் ஜானகியால் அதைத் தாங்கவே முடியவில்லை. தனக்கு அவ்விதமான அவல நிலை ஏற்பட்டிருந்தால் கூட அவ்வாறு கவலையும் துயரமும் கொண்டிருக்க மாட்டாள். அவள் தங்கையைக் கட்டிக்கொண்டு அழுத அழுகையைக் கண்டவர்கள் கூடக் கதறியழுதனர்.

இத் துக்க சம்பவத்துக்குப் பின், ஜானகி அகலிகையை இன்னும் கருத்தாகக் கவனித்து ஆதரவு தரலானாள். அவள் பிள்ளைப் பேற்றை உடனிருந்து கவனித்தாள். தாயையும் குழந்தையையும் தான் வைத்துக் காப்பதாக அவள் சொன்னாள். அகலிகையின் மாமியார் வீட்டார் மருமகளையும் குழந்தையையும் தங்கள் பாதுகாப்பிலேயே வைத்துக்கொள்வதாகக் கூறி அழைத்துக்கொண்டு போயினர். ஆனாலும் ஜானகி சமயம் நேர்ந்தபோதெல்லாம், தீபாவளி, பொங்கல், திருநாள் என்று சொல்லி அகலிகையையும் குழந்தையையும் அழைத்து மாதக் கணக்கில் வைத்திருந்து அனுப்புவாள்.

இவ்வளவு அன்னியோன்னியமாக இருந்து வந்த சகோதரிகள் திடீரெனப் பேசாமல் போய்விட்டதையும் ஒருவரையொருவர் பார்க்காமல் இருந்து வருவதையும் கண்டு பலர் வியப்புற்றனர். ஊராருக்கு மட்டுமல்ல ; பெற்றோருக்கும் அவர்களுடைய மனமாற்றத்துக்குரிய காரணம் தெரியவில்லை. இருவரையும் ' ஏன் பேசாமலிருக்கிறீர்கள் ' என்று யாராவது கேட்டால், ' ஒன்று

மில்லையே!' எனக் கூறி மழுப்பி வந்தனரே யொழிய, உற்ற காரணத்தை ஒருவரிடமும் சொல்லவில்லை. தீபாவளிப் பண்டிகை சமயத்தில், அகலிகை குழந்தையுடன் அக்கா வீட்டுக்குப் போயிருந்தாள். திரும்பி வந்தபின் அவள் முகத்தில் தெளிவில்லை. அதற்குப் பின் அவர்களுக்குள் பேச்சும் அறவே நின்றுவிட்டது.

இந்நிலையில் தான் அகலிகைக்குத் திடீரென டைபாயிட் சுரம் கண்டு படுத்த படுக்கையாய் விட்டாள். மன வேதனையும் கூடச் சேர்ந்ததாலோ என்னவோ, நோய் கடுமையாகி விட்டது. இதையறிந்து, பெற்றோர் அவளைத் தங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்து கடன் உடன் வாங்கி டாக்டர் வைத்துப் பார்த்தனர். அவர்கள் அகலிகையை மாமியார் வீட்டிலிருந்து அழைத்து வந்தவுடனே ஜானகிக்குத் தகவல் சொல்லியனுப்பினர். அதற்கு முன்பே திருக்கழுக்குன்றத்திலிருந்து அவளுக்குக் கடிதம் போயிருந்தது. தங்கைக்கு டைபாயிட் சுரம் என்றதும் ஜானகிக்குச் சரீரம் பதறத்தான் செய்தது. ஆனால் அடுத்த கணம், 'உண்ட வீட்டில் இரண்டகம் செய்த அந்தத் துரோகியையா போய்ப் பார்ப்பது?' என்ற எண்ணம் எழுந்து அவளைத் தடுத்துவிட்டது. தான் கொண்டிருந்த தனிப் பேரன்பையும் இரத்த பாசத்தையும் கூட மறந்து வைராக்கியமாயிருந்த அவளை, அன்னையின் உருக்கமான வேண்டுகோளும் உறவினரின் இடைவிடாத் தூண்டுதலும் சேர்ந்து கடைசியாக, அகலிகையைப் பார்க்கச் செய்தன.

3

"சன்னு, இதோ கண் திறந்து பார், யார் வந்திருக்கிறது, என்று?"

தாயின் கனிவு மொழிகளும் கரஸ்பரிசமும் அகலி கையைக் கண் விழித்துப் பார்க்கச் செய்தன. ஜானகி கண்ணீர் துளிக்கத் தன்னையே பார்த்துக் கொண்டிருப் பதைக் கண்டு அவளுடைய பஞ்சடைந்த கண்கள் மலர்ந்தன.

"அக்காவா?"

அந்தக் குரலில்தான் எவ்வளவு தாபம்?

"ஆமாம், அகல்யா! நான்தான்."

ஜானகி அழுதுகொண்டே சொன்னாள்.

"அக்கா, இப்போதாயினும் உன் மனம் இரங்கி யதே!..........உன்னைப் பார்க்கனும் என்று இருந்தது, பார்த்தாயிற்று; இனி நிம்மதியாக உயிர்போகும்...."

"அடி அசடே! என்ன உளறுகிறாய்?" என்று அன் பாகக் கடிந்துகொண்டு, "அவ்விதமெல்லாம் பேசாதே!" என்று அவள் வாயைப் பொத்தினாள் ஜானகி. "உனக்கு ஒன்றுமில்லை. இருபது நாட்களுக்கு மேலாகிவிட்டது, இல்லையா அம்மா? இனி சுரம் இறங்கிவிடும்" என்று கூறியவாறு தங்கையின் கண்களில் ததும்பும் நீரைத் துடைக்கலானாள்.

கோமதி தன்னுடைய மற்றப் பெண்களுக்கு ஜாடை காட்டி அழைத்துக்கொண்டு அவ்விருவரையும் தனியே விட்டுச் சென்றாள். ஜானகி சடைபிடித்து விட்டிருந்த அகலிகையின் கூந்தலைக் கோதிவிட்டு; மெலிந்துபோன தோள்களை வருடியவாறு இருந்தாள். இருவரும் நீண்ட நாள் பிரிவாற்றாமையை ஆற்றிக்கொள்ளச் சிறிது நேர மாயிற்று. ஒன்றுகூடிய பின்னரும் அகலிகையின் உள்

ளத்தை ஏதோ ஒரு எண்ணம் உறுத்திக்கொண்டே யிருந்தது. என்ன இருந்தாலும் அக்கா முன்போல் மனம் விட்டுப் பழகவில்லை என்று அவள் எண்ணினாள். இந்த மனக் குறையோடு ஜானகியின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்த அகலிகை இருந்தாற்போலிருந்து, "அக்கா, நான் உனக்குத் துரோகம் செய்திருப்பேன் என்று இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறாய்.......?" என்று கேட்டாள்.

"அகல்யா, வீணாக ஏதேதோ எண்ணி இச்சமயத்தில் உன் மனதை அலட்டிக்கொள்ளாதே !...." என்று கூறிக் கொண்டே ஜானகி நலுங்கியிருந்த தங்கையின் ஆடையை ஒழுங்கு செய்பலானாள்.

"இல்லை, அக்கா ! மனதில் வைத்துக்கொண்டே மடிவதில் பயனில்லை. உண்மையாக நடந்ததைச் சொல்லித்தான் ஆகவேண்டும். உயிருக்குயிரா யிருந்த உன்னை இவ்வளவு தூரம் விரோதங் கொள்ளச்செய்த அந்த அசம்பாவிதத்துக்கு நான் காரணமல்ல, பொறுப்பல்ல என்பதை நான் சொன்னால் இப்போதேனும் கேட்க வேண்டும்; நம்பவேண்டும். என்ன நடந்தது என்பதைச் சொல்ல நீ எனக்கு அவகாசமே கொடுக்கவில்லை; சந்தர்ப்பமே தரவில்லை. நான் எவ்வளவோ மன்றாடினேன். நீ சந்தர்ப்ப ஆவேசத்தால் அறிவையும் நிதானத்தையும் இழந்து ஒரே மூர்த்தண்யமாய் என் பேச்சைச் செவி கொடுத்துக் கேட்காமல் விரட்டிவிட்டாய். இப்போதேனும் கேள். நான்தான் தவறுசெய்தேன் என்று உனக்குப்பட்டால் என்னைத் தண்டி. ஏற்றுக்கொள்கிறேன். இல்லையானால் மன்னிப்பு அளி. எப்படியும் உனக்கு

உண்மை தெரியவேண்டும்......" என்று, ஜானகி 'இப் போது ஒன்றும் பேசவேண்டாம்' என்று பலமுறை இடையில் தடுத்தும் கேளாது அகிலா பேசலானாள்.

"அன்று நடந்தது இதுதான். நீ நம்ம மாமா மகனுக்குத் தீபாவளி வரிசை வைக்கிறார்கள் என்று சொல்லி அத்தையுடன் புறப்பட்டுப் போனாயல்லவா! நான் சமையல் செய்து குழந்தைகளுக்கெல்லாம் சாப்பாடு போட்டுவிட்டு அத்தானுக்காக எதிர்பார்த்திருந்தேன். அன்று என்னவோ அவர் துணிக் கடையை மூடிக்கொண்டு வர, ஒன்பது மணியாய்விட்டது. குழந்தைகளெல்லாம் தூங்கிவிட்டன. சுசிலா கூட உறங்கிவிட்டாள். அத்தான் வந்ததும், போனவர்கள் இன்னும் வரவில்லையா ?" என்று கேட்டார். 'நாளைக்குத்தான் வருவதாகச் சொல்லிப்போய் இருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டு, அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யலானேன். அவர் சாப்பிட்டுவிட்டுக் கூடத்தில் போய் உட்கார்ந்து ரேடியோவைத் திருப்பிச் சங்கீதம் கேட்டுக்கொண்டிருந்தார். நான் மற்ற வேலை களைச் செய்து முடித்துவிட்டு, டம்ளரில் பால் கொண்டு போய்க் கொடுத்தேன். கடைசியாக படுக்கையைத் தட் டிப் போட்டுவிட்டு, "அத்தான், வேறு ஒன்றும் வேண் டாமே ?" என்று கேட்டேன்.

ஈஸி சேரில் சாய்ந்தவாறே, அன்று மாலை வந்த பத்திரி கையைப் பார்த்துக்கொண்டிருந்த அவர் 'ஒன்றும் வேண் டாம்' என்று தலையை ஆட்டினார்.

அதுவரை அத்தான் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. இதற்கு முன்னையிலும் அவர் சகஜமாகப் பேசுவார். அதுகூட அன்று பேசவில்லை. நீங்களும் எத்தனையோ

முறை என்னைத் தனியே விட்டுவிட்டு விட்டு வேலைகளைக் கவனித்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போயில்லையா? அத்தான் அத்துமீறி நடந்துகொண்டதேயில்லை.

அன்று என்னவோ தெரியவில்லை. நான் நேரே அடுக்களைக்கு அடுத்த அறையில் போய்ப் படுத்துக்கொண்டேன். குழந்தைகளெல்லாம் கூடத்திலேயே படுத்துக்கொண்டிருந்தன. எல்லாரையும் எழுப்பி என்னுடன் படுக்க வைத்துக்கொள்ள முயன்றேன். முதலில் என் மகளைத் தூக்கினேன். 'ஏன், குழந்தைகள் இங்கேயேதான் படுத்திருக்கட்டுமே, காற்றோட்டமாய்?' என்று மெள்ளச் சொன்னார் அத்தான்.

அவர் சொல்லை மீறத் துணியவில்லை. ஆனால், தூக்கிய கமலாவை மட்டும் மீண்டும் அங்கேயே படுக்கவைக்காமல் எடுத்துச் சென்றேன்.

சிதம்பரம் உன் நினைவு வந்து ஒருவேளை அழுதால் எடுத்து ஆறுதல் செய்யலாம் என்ற எண்ணத்துடன், நான் கதவைத் தாளிடாமலே, வெளிச் சப்தம் கேட்கும் படியாக ஒருக்கணித்து வைத்துவிட்டு, குழந்தையுடன் படுத்துக்கொண்டேன்.

ரேடியோ சங்கீதம் என்னைத் தூங்க விடவில்லை. அந்தச் சமயம் பாழாய்ப்போன சினிமாப் பாடல் பிளேட்டுகளை வைத்து விட்டார்கள். ரசாபாசமான அந்தப் பாடல்கள் என் மன அமைதியைக் கெடுக்கலாயின. 'ரேடியோவை அத்தான் நிறுத்தமாட்டாரா?' என்று எண்ணினேன். 'நிறுத்தச் சொல்லலாமா?' என்றுகூட எண்ணமுண்டாயிற்று. ஆனால் அவர் விரும்பிக் கேட்கும் அதை எப்படி நிறுத்தச் சொல்வது? ரேடியோ நிலையத்

தார் நிகழ்ச்சியை முடித்த பின்தான் அத்தான் தூங்கப் போயிருப்பார். இம் மனப் போராட்டத்துடன் நான் எப்படியோ கண்ணயர்ந்துவிட்டேன்.

உறக்கத்தில் பலவிதமான கனவுகள் கண்டேன். கணவனுடைய பிரிவுக்குப் பின், இன்ப நினைவுகளால் எங்கியிருந்த ஏக்கத்தின் எதிரொலி அக் கனவில் விதவிதமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. புலன் அடக்கத்தாலும் நல்லொழுக்கத்தாலும் உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில் ஒடுங்கித் துயின்றுகொண்டிருந்த இன்ப உணர்ச்சிகள் இச் சமயம் எழுச்சிபெற்றுப் பேய்க் கூத்தாடின. அகமுடையானுடன் அனுபவித்த இன்ப சுக அனுபவங்கள் ஞாபகமுண்டாகி நரம்புகளைப் புடைக்கச் செய்து விகார உணர்ச்சிகளைக் கிளறிக்கொண்டிருந்தன.

இந் நிலையில் யாரோ என் உடம்பை வருடுவது போன்ற ஸ்பரிச உணர்ச்சி என்னை விதிர்ப்புற்று எழ வைத்தது. நான் துடித்துப் பதைத்து எழுந்திருப்பதற்குள் என்னை இறுகப் பிடித்துக் கீழே அமுக்க யாரோ முயல்வதாகத் தெரிந்தது. நள்ளிரவில் எவனோ திருடன்தான் வீட்டுக்குள் புகுந்து நகைகளையோ சாமான்களையோ திருட வந்திருக்கிறான் எனக் கருதிப் பயந்த நான் 'ஐயோ, திருடன்!' எனக் கூவ முயன்றேன். ஆனால், அதற்குள் முரட்டுக் கரமொன்று என் வாயைப் பொத்தலாயிற்று. நான் திமிறிக்கொண்டு, 'அத்தான்!' என மீண்டும் கூச்சலிடலானேன்.

என்னை எழுந்திருக்கவிடாமலே அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த அம் மனிதன் நான் போடும் கூச்சல் வெளியே கேட்காதபடி தடுக்க முயன்றவாறு, "அகல்யா,

கூச்சலிடாதே! குழந்தைகள் விழித்துக் கொள்ளப் போகின்றன......."

அக் குரல் கேட்டு நான் பேராச்சரிய முற்றேன். "யாரு?"

"நான்தான், அகல்யா !"

அம் மனிதன் என்னைப் பெயர் தெரிந்து கூப்பிட்டதும் எனக்கு மேலும் வியப்புண்டாயிற்று. குரலும் பழகிய குரலாயிருக்கிறதே! யாராயிருக்கும்? எதிர்பாராத அதிர்ச்சியால் குழம்பியிருந்த எனக்கு அம் மனிதன் யார் என உடனே நிச்சயிக்க முடியவில்லை.

"நான் தான் என்றால்....?" என்று விதிர்விதிர்ப்புடன் கேட்டு நிறுத்தினேன்.

"தெரியவில்லையா, அகல்யா !...."

நான் அம்மனிதனின் குரலை நிதானத்துடன் உற்றுக் கேட்டேன்.

என்னையறியாமலே, "அத்தான்....!" என வியப்புடன் என் வாய் விளம்பியது.

"ஆம்; உன் அத்தான் தான், ஆசை அத்...."

"ஐயோ, அத்தான்" என நான் அலறினேன்.

அவர் என்னை நாடி வந்திருக்கும் நோக்கத்தைப் புரிந்துகொள்ள எனக்கு அதிக நேரமாகவில்லை. இதை உணர்ந்ததும் என் உடம்பு கிடுகிடென ஆடியது; குபீரென வியர்த்துவிட்டது.

"பயப்படாதே, அகல்யா! யாருக்கும் தெரியாது."

"அக்கா...."

"அக்காதான் இல்லையே!...."

"அக்காவுக்குத் துரோகம்........"

நியாயத்தை எடுத்துச்சொல்லி அறிவுறுத்த அத்தான் எனக்கு அவகாசம் அளிக்கவில்லை.

நான் முதலில் முரண்டினேனாயினும், ஏற்கனவே கனவு நிலையில் என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்த இன்ப உணர்ச்சியை அத்தான் சாதுரியமாய்த் தட்டி யெழுப்பியதும் அதில் அறிவு மயங்கி அவசமானேன்.

என் நல்லகாலமோ கெட்ட காலமோ, நீயும் அத்தையும் மதுநாளும் வராமல் போய்விட்டீர்கள். 'இன்னும் இரண்டு மூன்று நாளாகும்; வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்' என்று ஆள்மூலம் சொல்லி யனுப்பினீர்கள். மிட்டாயின் இனிப்பை ஒரு முறை ருசி பார்த்துவிட்ட குழந்தையுள்ளம் அதைச் சுவைப்பதிலேயே ஆவல் கொள்வதுபோல், என் இளம் உள்ளமும் இன்ப சுகத்தை அனுபவிப்பதிலேயே ஆர்வங்கொண்டது. ஆதலால், அத்தான் இணைவிழைச்சுக்கு என்னை அழைப்பதற்குள், நானே வலியப் போய்ச் சல்லாபஞ் செய்யலானேன். இந்த இன்பக் களிப்பு மற்றச் சமயங்களிலும் என்னிடம் வெளிப்படையாகக் காணப்பட்டது. அத்தானும் இளம் பிள்ளையாய்விட்டார். குழந்தைகள் இருப்பதையும் கவனிக்காமல் அவர் என்னுடன் கேளிக்கையாகப் பேசிச் சிரித்து கும்மாளி போடலானார். எங்களுடைய இக் களியாட்டம், விவரம் தெரியாத சிறுபெண்ணான சுசீலாவும் நாங்கள் இருப்பது ஏதோ விபரீதமான நிலை; வெட்கக்கேடான விஷயம் என்று உணர்ந்து நீ வந்ததும் வாராததுமா யிருக்கும்போதே உன்னிடம் புகார் சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது.

நீ விஷயத்தை நிதானமாக இருந்து பார்த்து முடிவுக்கு வராமல், விதவையான நான் உன் கணவனை என் வசப்படுத்திக்கொண்டேன் என்று தவருக எண்ணி ஆத்திரங் கொண்டுவிட்டாய். தன் வாழ்க்கையை இன்னொரு பெண், அவள் சகோதரியாயிருந்தாலும் பங்கு கொள்கிறுள் என்ருல், அது யாருக்கும் கோபத்தை உண்டுபண்ணவே செய்யும். 'பெண்கள் எதைக் கொடுத்தாலும் கொடுப்பார்கள்; தங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்து கொடுக்கச் சிறிதும் சம்மதிக்கமாட்டார்கள்' என்று பெரியவர்கள் சொல்வது உண்மையான விஷயம். நான் என்னதான் கணவனில்லாத கைம்பெண்ணுயிருந்தாலும் அக்காவுக்கு —வேறு யாருக்கும் கிடைக்காத அன்புடைய அக்காவுக்கு உரிமையான கணவனைக் கவருவேனு? அருமை அக்காவான உனக்குத் துரோகஞ் செய்வேனு? நீ சிறிது எண்ணிப் பார்க்கக்கூடாதா? அக்கா!....?" என்று கூறி நிறுத்தினுள்.

தலைகுனிந்து கேட்டுக்கொண்டிருந்த ஜானகியின் கண்களிலிருந்து நீர் சொட்டலாயிற்று.

ஜானகிக்கு அதற்குமேல் மௌனமாயிருக்க முடியவில்லை. "அகல்யா, போதும். எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. உன்மீது ஒரு குற்றமுமில்லை; அவர்தான் குற்றவாளி; அவர்கூட இல்லை; நான்தான் முழுக் குற்றவாளி. பெண்ணினம் நீண்ட காலமாகச் செய்துவரும் பிழையைத்தான் நானும் செய்தேன். என் கணவனைக் கூட என்னுல் நன்ருகப் புரிந்துகொள்ள முடியவில்லையே! அவர் அளித்த படிப்பினையிலிருந்து எனக்கு ஒரு உண்மை புலனுயிற்று.

'மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்' என்று பாரதியார் பாடியிருக்கும் பாடலை, 'மண்ணுக்குள்ளே ஆண் கூட்டம் நல்ல மாதர் அறிவையும் கெடுக்கும்' என்று திருத்திப் பாடவேண்டும். பெரும்பாலும் பெண்கள் முதலில் தவறு செய்வதில்லை. ஆண்கள் தான் முதலிலும் என், கடைசியிலும் கூடத் தவறு செய்து வருகின்றனர். உன் அத்தான் ஆண். அதனால் தவறு செய்தார். நீ பெண்; அதனால் பிழை செய்திருக்க மாட்டாய். நான் நம்புகிறேன், அகல்யா, நம்புகிறேன்."

ஜானகியின் உணர்ச்சி மிக்க பேச்சு கடுமையான விஷக் காய்ச்சலால் கருகிப்போயிருக்கும் அகலிகையையும் துள்ளி எழச் செய்தது. அவள் அக்காவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "அக்கா, நீதான் அக்கா பெண்; பிழை பொறுக்கும் பெருங்குணமுடைய பெண்மணி" என்று கூறிப் பொருமினள்.

தாயின் சிலை

மாதவன் மயிலாப்பூர் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் வாயிலிருந்து சிகரெட் புகை சுருள் சுருளாக வந்தவாறிருந்தது. விரல்கள் அடிக்கடி சிகரெட்டை எடுத்துச் சாம்பலைத் தட்டியவண்ணமிருந்தன. 1, 5, 7, 9, 10 இப்படியாக மற்ற நெட் பஸ்களெல்லாம் சில விநாடிகளுக்கு ஒருதரம் வந்து வந்து போய்க்கொண்டிருந்தன. ஆனால், 3-ம் நெம்பர் பஸ் மட்டும் வெகுநேரம் வரை வரவேயில்லை.

பஸ்ஸுக்காக நின்றிருந்த பிரயாணிகளின் பேச்சு ஆரவாரமோ அவர்களை நெருப்பின்மீது நிற்பவர்கள்போல நினைக்கச்செய்து பிச்சை கேட்டுத் தொல்லைப்படுத்தும் பிச்சைக்காரர்களின் கோரக் கூச்சலோ, பேப்பர் விற்கும் பையன்களின் கத்தலோ, கார், பஸ்களின் 'ஹார்ன்' சப்தமோ புகை போதையில் மூழ்கியிருந்த மாதவனைச்

சலனமுறச் செய்ததாகத் தெரியவில்லை. அவன் கவனம் எங்கு சென்று பதிந்திருக்கிறது என்று ஊகித்தறியக்கூட முடியாதபடி, கண்கள் சூன்யத்தில் நிலைத்திருந்தன.

'அடடே! பஸ் வருது, குழந்தை அடிபட்டுக்கப் போறது" என்று ஒருவர் போட்ட கூச்சல் மாதவனைச் சூழ்நிலைக்குக் கொண்டுவந்தது.

மற்றொருவர் குழந்தையைப் பிடித்திழுத்துப் பிளாட்பாரத்தில் விட்டார்.

'ஆத்தமாட்டாமே பெத்துப் போட்டு இப்படி அலைய விடுறாங்களே, இவங்களை என்ன செய்யறது!' என்று கடிந்து பேசினார் இன்னொருவர்.

'ஆமாம்; ஜன நடமாட்டம் உள்ள இடங்களில் இப்படி, சட்டி பானைகளை வைத்துக்கொண்டு, இந்த ஜனங்கள் குடித்தனம் பண்ணுகிறதற்கு எப்படி சார், அனுமதிக்கிறார்கள், கார்ப்பொரேஷன் காரர்கள்? கேள்வி முறையே கிடையாதா?'

'இவர்கள் வசிப்பதற்கு வேறு இடம் கொடுக்க வக்கில்லாமல்தான், கண்டும் காணாமலும் இருக்கிறார்கள் நகரசபையாரும் சர்க்காரும்.'

'மற்ற நாடுகளில் இந்தமாதிரி காட்சியைப் பார்க்க முடியாது, சார்.'

'ஆமாம்; ஆமாம். நம்ம தேசம் முன்னேறுவதற்கு இன்னும் ரொம்ப காலமாகும், பிரதர்.'

பிரயாணிகளின் இவ்விமர்சனங்களை அடக்கி விட்டு எழுந்தது அன்னையின் அலறல்.

'ஐயோ, என் கண்ணுக்கு என்ன?' என்று கேட்டுக் கொண்டே பதறியோடி வந்தாள் ஒரு பெண். ஒருவர் ஓரமாகப் போகுமாறு கொண்டுவிடுவதைக் கண்டு அவள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து குழந்தையை வாரி யெடுத்து அணைத்துக்கொண்டாள்.

'குருட்டுப் பிள்ளையைப் பெத்துப்போட்டுட்டு வெக்க மில்லாமே கொஞ்சறு, பாரு.'

'கொஞ்சுவா, கொஞ்சுவா. இந்நேரம் பஸ்ஸிலே அப்புட்டுப் பஞ்சாயிருந்தா கொஞ்சறது தெரிஞ்சிருக்கும்.'

'கண்ணில்லாத கபோதிப் பிள்ளையெப் போயி, என் கண்ணுக்கு என்ன'ன்னு கேட்கற வக்கணையெப் பாத்தியா?'

நடைபாதைவாசிகளின் வம்பளப்பு ஏளனமும் சிரிப்புமாக வளர்ந்தது. இந்த ஏச்சுப் பேச்சைக் கேட்கச் சகியாமல் காத்தாயி கண்ணீர் விட்டுக்கொண்டே அவ் விடத்தை விட்டு அகன்றாள்.

மற்ற நிகழ்ச்சிகளை விட, காத்தாயி பரிவோடு பதறி வந்து குழந்தையைத் தூக்கிய காட்சிதான் மாதவனின் உள்ளத் திரையில் அற்புதச் சித்திரமாகப் பதிந்துவிட்டது. அதில், காத்தாயியின் தாய்மை வடிவம் பொலிவுற்று விளங்கியது. ஆம்; உழைப்பால் உருக்குலைந்துள்ள அந்தப் பாட்டாளிப் பஞ்சை மகளின் கருமை உருவத்தில் என்னத்தைக் கண்டுவிட்டானே? என்ன அழகு தோன்றியதோ?

2

'என்னப்பா, இப்பிடி வெறைச்சிப் பாத்துக்கிட்டிருக்கிறே என்னே!'

'இல்லே; சும்மா பார்த்தேன்.'

'ஒரு ஆம்பிளே ஒரு பொம்மனாட்டியெ போயி எவ்வா சும்மா பாக்கறதாம். நன்றாருக்கே கதை? நானும் நாலு நாளா பாத்துக்கிட்டுதான் வாறேன், நீ இங்கயே வட்டமிட்டுக்கிட்டிருக்கறதை. உன் மனசிலே என்னன்னு நெனச்சிகிட்டே? ஏழை பாழைங்கன்னு இவ்வள எளப்பமா உங்களுக்கு?....'

'இதோ பாரு; அதெல்லாம் ஒன்றுமில்லே.'

'எங்களுக்குத் தெரியுப்பா, உன்னெப்போல சோதா பசங்க சமாசாரம். வேறெ ஆளெப் போயி பாரு. உன் தன் வீச்சுக்குப் பல்லெ பிளிச்சிக்கிட்டு வருவாளுவ....'

'..............................'

'பஞ்செ பருதிகளா இருந்தாலும் நாங்கள்ளாம் மானத்தோட வாழணுமுன்னு நெனக்கறவங்க. நீ இப்பிடி என்னெ வெறைச்சி பாக்கறது தெரிஞ்சா என் புருஷன் கொன்னு போட்டுடுவாரு, ஆமாம்....'

'நான் சொல்லுகிறதைக் கொஞ்சம் கேளு, அம்மா! நீ நினைக்கிறமாதிரி ஆளு இல்லே நான். உன்னை எந்தவிதமான கெட்ட நோக்கத்தோடும் பார்க்கவில்லை. நான் சொல்வதை நம்பு....'

‘அம்மா’ என்று மாதவன் அழைத்ததும் காத்தாயி சிறிது நிதானித்தாள். இதுவரை அவளை மற்றவர்கள், ‘ஏ அம்மே! என்னம்மே! வா அம்மே! போ அம்மே!’ என்றுதான் ஏக வசனத்தில் மரியாதையின்றிக் கூப்பிடுவதைக் கேட்டிருக்கிறாள். இவ்விதம் ‘அம்மா’ என்று அவள் தகப்பன்கூட அழைத்ததில்லை. ஆகவே, அவள் ஆத்திர உணர்ச்சியினின்றும் விடுபட்டு அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

மாதவன் இதுதான் சமயமென்று அவளிடம் தன் கருத்தைச் சொல்லத் தொடங்கினான்: ‘நீ சொன்ன மாதிரி நாலு நாளாய்-இல்லை; -அந்த நாளாய் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால், நீ குற்றம் சாட்டுகிறதுபோல உன்னைக் கெட்ட நோக்கத்தோடு நான் வட்டமிடவில்லை. உன்னண்டை ஒன்று கேட்கலாம் என்று......’

காத்தாயி ஆவலோடு, ‘என்னது ஐயா?’ என்று கேட்டாள்.

அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு மாதவன், ‘வேடிக்கையில்லை, அம்மா! நான் ஒரு சிற்பி; அதாவது சிலை செய்கிறவன். அன்றைக்கு நீ கார் விபத்திலிருந்து தப்பிய உன் பிள்ளையை ஓடிவந்து தூக்கிக்கொண்டு பொருமிய காட்சி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அந்தத் தாய் வடிவத்தைச் சிலையாக வடிக்கவேண்டுமென்று ஆசை....’ என்று மெல்லச் சொன்னான்.

‘அப்படியா? உங்களோட ஒரு திவ்யமான பார்வையையும் சதா புகைப்பதையும் புர்க்கா சொக்காயையும்

பாத்து மோசமான ஆளுன்னல்ல நெனச்சேன்' என்று காத்தாயி தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

சித்திரந் தீட்டுபவர்கள், சிலை செய்பவர்கள் பெண்களை வரவழைத்து வைத்து, அவர்களைப்போல, சித்திரந் தீட்டுவதையும் களிமண்ணினால், செப்பினால் சிலை செய்வதையும் காத்தாயி கேள்விப்பட்டிருக்கிறாள். தங்கள் இனத்துப் பெண்கள் கூடச் சிலர் சித்திரப் பள்ளிக்கூடத்துக்குப் போய் அங்கு செய்யப்படும் உருவச் சிலைகளுக்கு 'மாதிரி'யாய் இருந்துவிட்டுக் காசு வாங்கிக்கொண்டு வருவதை அறிந்திருக்கிறாள். ஆதலால், மாதவனின் பேச்சில் அவளுக்கு நம்பிக்கை யேற்பட்டது. மாதவன் கூப்பிடுவதற்கு இசைந்து போனால், பணங்கிடைக்கும் என்று அவள் பஞ்சையுள்ளத்தில் சிறிது சபலந்தட்டியது. அவள் கணவன் முதுகெலும்பு முறிய பாரவண்டியிழுத்தும், மூட்டை தூக்கியும் கூட அன்றாடம் அரைவயிற்றுக் கஞ்சிக்கும் பணம் சம்பாதிக்க முடியாமல் கஷ்டப்படுங் காட்சி ஒரு கணம் அவள் கண் முன் தோன்றி மறைந்தது. குருட்டுப் பிள்ளையைப் பெற்றிருப்பதால், தானும் முன்போல ஓடியாடி வேலை செய்து காசு சம்பாதிக்கமுடியாம லிருக்கிறது என்பதையும் இச் சமயம் நினைத்துக்கொண்டாள்.

காத்தாயி இவ்விதம் யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட மாதவன், "இதோ பாரம்மா, யோசனை செய்வதற்கு இதில் ஒன்றுமேயில்லை. உனக்கு ஒரு கஷ்டமும் கிடையாது. நீ சும்மா வந்து நிற்கவேண்டியதுதான். தினம் இரண்டு மூன்று மணிநேரம் வந்திருந்தால் போதும். என் ஸ்டுடியோ ராயப்பேட்டை ஹைரோட்டில் தான் இருக்கிறது. நான் வேணுமானால் வந்து உன்னை அழைத்

துப் போகிறேன். நீ உன் புருஷனிடம் சொல்லிவிட்டே வரலாம்....' என்றான்.

'அதெல்லாம் வாணாங்க. நானே வாறேனுங்க. மற்றவங்களுக்குத் தெரிஞ்சா, பொச்சரிப்புக்கார சிறுக்கிங்க கேவலமா பேசுவானுவ. என் வூட்டுக்காரும் இதுக்கு ஒத்துக்க மாட்டாரு. சாதாரண சமாசாரத்துக்குக்கூட அவரு சந்தேகப்படறவருங்க. அதனாலே, காதோடே காது வைச்சாப்பலே இந்தக் காரியம் நடக்கணுமுங்க, தெரியுதுங்களா ?'

'உன் இஷ்டப்படியே செய்யலாம்' என்று கூறிய வாறே, ஒரு ரூபாய் நோட்டுகள் ஐந்தை மணிபர்ஸிலிருந்து எடுத்து, 'இந்தா, இதை வைத்துக்கொள்' என்று நீட்டினான்.

'இருக்கட்டுமுங்க. இப்ப எதுக்கு ?' என்றாள் மரியாதையாக. ஆனால், அவள் கை பணத்தை வாங்கிக் கொண்டது.

மாதவன் சித்திரகூடம் இருக்குமிடத்தை விவரித்துச் சொல்லிவிட்டு, "ஆமாம், உன் பெயர் என்ன அம்மா !' என்று கேட்டான்.

'என் பேருங்களா ? காத்தாயின்னு கூப்பிடுவாங்க' என்று புன்முறுவலுடன் கூறினாள். குழந்தை தேடுவான் என்னைக் காணல்லைன்னு. நான் போவட்டுங்களா ?'

'சரி, போய்வா. நான் சொன்ன இடத்தை விசாரித்துக்கொண்டு வந்துவிடுவாய், இல்லையா ?'

'ஓ !'

'இல்லை; நான் வந்து நானே கூட்டிக்கொண்டு போகட்டுமா?

'ஊஉம்; வாணாமுங்க. நானே வந்துடறேன்.' என்று கூறிக்கொண்டே விரைந்து போகலானாள். அவள் போவதையே பார்த்துக்கொண்டு, இதுவரை விரல் இடுக்கில் எரிந்துகொண்டிருந்த சிகரெட் நெருப்பில் இன்னொரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துப் புகைத்தவாறே பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தான் மாதவன்.

3

காத்தாயி மாதவனின் சிற்பக்கூடத்தைப் பார்த்து மலைத்துப்போய் நின்றாள். 'ஆளைப் பாத்தா அம்பத்தாண்டி இருக்காரு. வேலைய பார்த்தா ஆத்தாடி எம்புட்டுப் பிரமாதமா இருக்கு?" எனத் தனக்குள்ளாகக் கூறிக்கொண்டு ஆச்சரியப்பட்டாள். தன் குருட்டுக் குழந்தை எங்கே தெரியாமல் கொள்ளாமல் போய் எதையாயினும் சாய்த்து உடைத்துவிடப்போகிறதென்று அஞ்சி அதைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு அங்குள்ள சிலைகளையெல்லாம் பார்க்கலானாள். நிர்வாணமாகவுள்ள சிலைகளைக் கண்டபோது அவள் கண்கள் கூசின. நாணத்தோடு முகத்தைத் திருப்பிக்கொண்டு அவள் வேறு சிலைகளைப் பார்க்கத் தொடங்கினாள்.

வெள்ளைக் களிமண்ணைத் திரட்டிக் கொண்டுவந்து ஒரு பக்கம் வைத்துவிட்டு, மாதவன் காத்தாயியை எங்கு நிற்க வைக்கலாம், எப்படி நிற்க வைக்கலாம் என்று யோசிக்கலானான்.

அவன் சிலை செய்ய ஆயத்தமாவதைக் கண்டதும் காத்தாயி, 'இதோ பாருங்க, ஐயா! நான் இப்ப இருக்கிற படிதான் நிப்பேன். (நிர்வாணச் சிலைகளைச் சுட்டிக்காட்டி) அது மாதிரி அம்மணமா நிக்கச்சொன்ன....'

மாதவன் குறுக்கிட்டு, 'சே! சே! அப்படியெல்லாம் உன்னை நிற்கச்சொல்லமாட்டேன். பயப்படாதே, காத்தாயி!' அதற்கெல்லாம் வேறு பெண்கள் இருக்கிறார்கள்.... அததற்குத் தகுந்த ஆளைப் பார்த்துத்தான்...." என்றான்.

மாதவன் முதலில் தாயையும் மகனையும் சேர்த்தே சிலை செய்ய நினைத்தான். ஆனால், சிறிது யோசித்ததில் அது அவ்வளவு கவர்ச்சியாக அமையாது என அவன் மனது எண்ணப்பட்டது. ஆகவே, இதன்பின் வேண்டுமானால், குழந்தையுடன் நிறுத்திச் சிலைசெய்துகொள்ளலாம் என்று எண்ணி முதலில், காத்தாயியை மட்டும் சிலையாக வடிக்கத் தீர்மானித்தான்.

குழந்தையிடம் கொஞ்சம் பட்சணம், பழங்களைக் கொடுத்துத் தின்னச் சொல்லிவிட்டு, காத்தாயியைத் தான் சிலையமைக்கும் இடத்துக்கு எதிராக நிறுத்திக்கொண்டான். முன்பின் பழக்கமில்லாததால் காத்தாயிக்குக் கூச்சமாக இருந்தது. மாதவன் அவளைத் தாயின் பரிவு தோன்றும்படியாக முகமலர்ச்சியுடன் இருக்கச் சொன்னான். அவள் செயற்கையாக அவ்வித உணர்ச்சியைக் கொள்வதற்கு மிகச் சிரமப்பட்டாள்.

பட்சணங்களைத் தின்றுகொண்டிருந்த பாலகன் தாயின் நினைவு கொண்டு, 'அம்மா, அம்மா" என்று கூப்பிட்டான். உடனே காத்தாயியிடம் தாய்ப்பாசம் உண்டாய்விட்டது. அடுத்த கணம் அவள் மகனை நோக்

பித்தாகியிருப்பாள். மாதவன் கையமர்த்தி, 'காத்தாயி, சற்று அதே நிலையில் இரு....குழந்தையை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்று கூறிக்கொண்டே குழந்தையிடம் சென்று ஒரு பழத்தை உரித்து வாயில் ஊட்டி அவன் கவனத்தை மாற்றிவிட்டு வந்து, தன் வேலையைத் துரிதமாகத் தொடங்கினான்.

'பிள்ளைக்கு என்ன வயசு?'

கை வேலை செய்துகொண்டேயிருக்க மாதவன் வாய் பேசியது.

'ஐப்பசியோடே மூணு முடியப் போவுதுங்க.'

'பிறக்கும்போதே குருடா? அல்லது....'

'பிறவிக் குருடுதானுங்க, மாரியாத்தா குத்தமுன்னு ....'

காத்தாயியின் சோக நிலையைக் கண்டு பேச்சை மாற்றிவிட்டான் மாதவன்.

'கண்ணில்லாவிட்டாலும் குழந்தை லட்சணமாக இருக்கு.......என்ன பேர் வைத்திருக்கிறாய்?'

'முனிசாமின்னு. நாங்க முனியா முனியான்னு கூப்பிடுவோமுங்க.'

'பேசுறுதா?'

'இன்னம் பேச்சு சரியா வர்றலிங்க.'

மாதவன் மேலே பேசாமல், தன் வேலையில் கவனத்தை ஊன்றிவிட்டான். சிறிது நேரத்துக்குப் பின், அவன் மண் பிடித்து வைத்துள்ளவரை எப்படி யமைந்திருக்கிறதென்று பல கோணங்களிலிருந்து கவனிக்கலானான்.

இதனிடையே, குழந்தை கட்டித் தடமாறித் தடவிக் கொண்டுவந்து தாயிடம் சேர்ந்துவிடவே, காத்தாயி தான் இருக்கும் நிலையை மறந்துபோய் அதையெடுத்துக் கொஞ்சத் தொடங்கிவிட்டாள்.

மாதவனுக்கு இதைக் கெடுக்க மனம் வரவில்லை. ஆகவே, அத்துடன் வேலையை நிறுத்திவிட்டு, 'சரி, காத்தாயி! இன்றைக்கு இத்துடன் இருக்கட்டும். நீ போய் நாளை நேரத்தில் வந்துவிடு; என்ன!' என்று கூறி விடை கொடுத்தான். அத்துடன், அவள் கையில் மூன்று ரூபாய்களையும் கொடுத்து அனுப்பினன்.

இதுபோன்றே மாதவன் தினமும் சமயோசிதம்போல் இரண்டுமணி நேரம், மூன்று மணிநேரம், சில சமயங்களில் வேலையில் ஊக்கமுண்டாகவில்லையானல், தெம்பு குறைந்துவிட்டால் ஒரு மணி, அரை மணிக்குள் கூட, காத்தாயியை அனுப்பி விடுவான். பணங் கொடுப்பதும் ஒரு நாளைக்கு மூன்று நாலு, சில நாட்களில் ஐந்து ஆறு, ஏன்? பத்து ரூபாய்கூடக் கொடுத்து அனுப்புவான்.

சித்திரப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் செல்லப்படும் பெண்களுக்கு—அதுவும் நிர்வாணமாக நிற்க இசையும் மகளிர்க்குக்கூட—இரண்டு மூன்று ரூபாய்களுக்குள் தான் கொடுப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறள் காத்தாயி. மாதவனே ஒரு வரையறை யில்லாமல் தாராளமாகப் பணம் வழங்குவதுடன், குழந்தைக்கும் தின்பண்டம், சட்டை முதலியன வாங்கிக்கொடுத்துப் பிரியமாக நடந்துவருவதைக் கண்டு அவள் ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டாள்.

ஒருநாள் விடாமல் சுறுசுறுப்பாக வேலை செய்ததால், உருவச் சிலை விரைவில் உருவாகிவிட்டது. கடைசியாகக் கண்களைத் திறந்து வெள்ளி வர்ணங்கூடப் பூசி முடித்து விட்டான் மாதவன். காத்தாயி தன் உருவச் சிலையைப் பார்த்துப் பிரமித்துவிட்டாள். தன் உருவத்தையே கண்ணாடியில் பார்ப்பதுபோல் அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருப்பதைக் கண்டு அவள் வியப்புற்றாள். மாதவனுக்கு மட்டும் பூரண திருப்தி யேற்படவில்லை. மேதையாயுள்ள கலைஞனுக்கும் புலவனுக்கும் தங்கள் சிருஷ்டிகளில் திருப்தி யேற்படுவதென்பது அவ்வளவு சாமானியமா?

'எதற்கும் நாளைக்கு ஒரு தடவை மட்டும் வந்துவிடு, காத்தாயி! கடைசியாக ஒருமுறை உன்னை வைத்துப் பார்த்து ஒப்பனை செய்யவேண்டியதை ஒழுங்கு செய்து விட்டு அனுப்பி விடுகிறேன்' என்று அவன் கூறியனுப்பினான்.

'அப்படியே வாறேனுங்க' என்று சொன்னாள் காத்தாயி.

4

காத்தாயி வழக்கத்தைவிட விடியற்காலையில் எழுந்து விட்டு வேலைகளைப் பரபரப்பாகச் செய்யலானாள். குழாயடியில் போய்க் குளித்துவிட்டு வந்தாள்; முன்னாள் துவைத்து வைத்திருந்த சேலையை எடுத்துக் கட்டிக் கொண்டாள். தலைவாரிக் கோதிக் கொண்டை போட்டுக் கொண்டாள். நெற்றியில் அகலமாகக் குங்குமம் வைத்தாள். குழந்தையையும் குளிப்பாட்டிப் பின்னல்போட்டு வெளுத்த சட்டை உடுத்தினாள்.

மனைவியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே பல் விளக்கி முகம் கழுவிவிட்டு வந்து உட்கார்ந்த சடையாண்டி, குடிக்கக் கூழ் கொண்டுவந்து வைத்த காத்தாயியை நோக்கி, "ஆமாம்; இவ்வள காலெலே என்ன சிங்காரம்? எங்கே ஆத்தாளும் புள்ளையுமா...." என்று கேட்டு நிறுத்தினான்.

அப்போதுதான் காத்தாயி தன் தவற்றை உணர்ந்தாள். தன்னை மறந்த நிலையில் பதட்டமாகச் செய்த காரியத்துக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு கணம் திகைத்தாள்.

பீங்கான் தட்டை இழுத்துவிட்டு, "என்ன? நான் கேட்கறேன். பேசாமெ இருக்கறே?......' என்று உறுமினான்.

"இல்லே...." என்று இழுத்தாள்.

"என்ன இல்லே?....எல்லாம் தெரியுண்டி எனக்கு உன் சங்கதி! இவ்வள நாளா கேக்கணும், கேக்கணு முன்னு நெனச்சிகிட்டிருந்தேன். இன்னிக்கி நீயே மாட்டிக் கிட்டே,....எவ்வள நாளா இந்த மாதிரி தட்டுவாணித் தனம் பண்ணிக்கிட்டிருக்கிறே....?"

"ஆ!" என அலறினாள்.

"இந்த நீலி வேஷமெல்லாம் போட்டா உன் தேவடியாத்தனம் மறைஞ்சுடுமுன்னு நெனைக்காதே. நீ நடக்கற நடத்தையெல்லாம் இங்கிருக்கறவங்க கவனிச்சிச் சொல்லிகிட்டுதான் வர்றாங்க. நான் வேலைக்குப் போனதுமே நீ எங்கேயோ போறது; சாயங்காலம் நான் வாறதுக்குள்ளற,

நீ ஒன்னுந் தெரியாததுபோல வந்துட்டறது; எல்லாம் எனக்குத் தெரியுண்டி, தெரியும்....''

அவர்களுடைக் குடியிருக்கிறவர்கள்—முக்கியமாகப் பெண்கள்—காத்தாயி தங்களிடம் கூடச் சொல்லாமல் சொல்லாமல் எங்கேயோ போய் வருவதையும், கையிலே எப்போது பார்த்தாலும் காசு நடமாடுவதையும், பிஸ்கெட்டும், மிட்டாயும் பழமுமாக அவள் குழந்தை தின்றுகொண்டிருப்பதையும் பார்த்து தவறுதலாக நினைத்துக்கொண்டார்கள். தங்கள் இனத்திலுள்ள சில இளம் பெண்கள் அற்பப் பொருளுக்கு ஆசைப்பட்டு விபசாரப் படுகுழியில் விழுந்து உழல்வதைப் போல, காத்தாயியும் குச்சுக்காரியாய் விட்டாளோ என்று எண்ணிவிட்டனர். அத்துடன் அவர்களில் சிலருக்குப் பொறாமை பொச்சரிப்பு உண்டாய் விடவே, அவள் யாரோ ஒரு வாலிபனோடு பேசிக்கொண்டு போவதைப் பார்த்ததாகவுங் கூட, காத்தாயியின் மீது கோள்மூட்டி விட்டனர். சந்தேகப் பேர்வழியான சடையாண்டி, இதை மெய்யென்றே நம்பிவிட்டான்.

'இதென்ன, இருந்தாற்போலிருந்து இப்பிடி பேசறே? மச்சான்....'

காத்தாயி சிறிது துணிந்துதான் கேட்டாள்.

'சும்மா பசப்பாதேடி! மச்சான்னு கூப்பிட்டா நான் மவுந்துடுவேன்னு நெனச்சியா? இன்னிக்கு ரெண்டிலே ஒன்னு தெரிஞ்சாகணும். பத்துநாளானாலும் உடம்பிலே தண்ணி கொட்ட யோக்யதையில்லாத பறச்சிறுக்கிக்கி தினம் குளியல் என்னடி? கட்டின கந்தையே அவுத்துப்போட்டு வேறெ கட்டறதுக்கு வக்கில்லாத பஞ்சைக்கு அன்னாடம் தோய்ச்சிப் போட்டுக் கட்ட சீலை யேதடி?

சுறும் பேனுமா இருக்கற கொண்டைக்கி பூவு, நெத்திலே பொட்டு, இதுக்கெல்லாம் எங்கேருந்துடி துட்டு வருது? எந்த மாப்பிளேடி குடுக்கிறுன் உனக்கு. சொல்லு, இல்லேன்னு உன் உசிரெ எடுத்துடுவேன்' என்று ஆங்காரத்தோடு பேசினுன்.

காத்தாயி கதிகலங்கிவிட்டாள்.

சடையாண்டி அவள் தலைமயிரை எட்டிப் பிடித்து, 'வாய்க்கு வழணமா ஆக்கிப்போட்டா மயந்துபோயி பேசாதிருந்துடுவேன்னு எண்ணிக்கிட்டையா? பெண்டாட்டி ஊர்மேலே போயி வந்து சம்பாதிச்சு போட்டா குந்திக்கிட்டுச் சாப்பிடறுவங்களே! அதுமாதிரி மானங்கெட்ட சோம்பேறின்னு என்னெ நெனச்சிக்காதேடி..... தெரியுமா?' என்றுன்.

'நான் சொல்றதே செத்த கேளுங்களேன். பொச்சரிப்புக்காரங்க பேச்சைக் கேட்டு வாயிலே வராததெல்லாம் பேசறீயே!....' என்று சமாதானஞ் சொல்லிக்கொண்டே, தலைமயிரை அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றுள்.

'என்னடி கேட்கறது? எனக்குச் சமாசாரம் தெரியாகாட்டி தானேடி உன்னெக் கேக்கணும். ஊரு மேலே போறவள் நான் போறேன்னு உள்ளதை ஒப்புக்கு வாளா?....'

காத்தாயிக்கு கணவனின் அபவாதப் பேச்சைக் கேட்கக்கேட்க நெஞ்சே வெடித்துவிடும்போலாய்விட்டது. இவ்வளவு நாள் பழகியும் தன் கணவன் தன்னை இவ்விதம் சந்தேகிக்கிறுனே என்று எண்ணி அவள் அகங் கரைந்தாள்.

இப்போப்பட்டவனுக்கு என்ன சொன்னால் ஏற்கப் போகிறது? என்று ஏங்கினாள்.

"ஆமாம், உனக்குப் பணம் ஏது? அதைச் சொல்லு. நீ தேவடியாத்தனம் பண்ணுறையா வந்திருக்கே........"

"நாக்கு அழுகிப்புடப் போவுது...."

"உத்தமபத்தினியோல்லியோ! உன்னைச் சொன்ன நாக்கு அழுகிக்கான்றுடும்.... கட்டிவாணித்தனம் பண்றதையும் பண்ணிப்புட்டு நான் கேட்டா என் நாக்கு அழுகிப்பூடுமுன்னு சொல்றே....?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து எச்சிற் கையோடு அவளை இழுத்துப்போட்டு அடி அடி என்று அடிக்கலானான். அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் யாரும் வந்து தடுக்கவில்லை. எல்லோரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். சில பெண்களுக்கு உள்ளூற சந்தோஷங்கூட ஏற்பட்டது. அடி தாங்காது தரையில் விழுந்த காத்தாயி வெகு நேரம் வரை எழுந்திருக்கவில்லை. அடிச் சத்தத்தையும் அன்னையின் அலறலையும் கேட்டு முனிசாமி "அம்மா! அம்மா!" என்று கதறலானான்.

பிள்ளையின் புலம்பல் சடையாண்டியை நிதானத்துக்குக் கொண்டு வந்தது.

"நான் போனப்புறம் வெளியே போனதா தெரிஞ்சுதோ, சாயக்காலம் வந்ததும் காலை முறிச்சிடுவேன். ஜாக்கிரதை" என்று எச்சரித்துவிட்டு அவன் வேலைக்குப் போய்விட்டான்,

காத்தாயி பிள்ளையைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பியழுதாள். அன்றெல்லாம் அவள் ஒரு பருக்கையைக்கூட எடுத்து வாயில் போடவில்லை. அன்று பகல்வரை என்னென்னதெல்லாம் எண்ணியெண்ணி அவள்

நெஞ்சம் புண்ணாய்க்கொண்டிருந்தாள். எங்காயினும் குளம் குட்டையில் போய் விழுந்துவிட்லாமா என்றுகூட எண்ணினாள். ஆனால், தன் பிள்ளை—ஒரே பிள்ளை—அதுவும் கண்ணில்லாக் கபோதிப் பிள்ளையை விட்டுவிட்டு எப்படி போவது? எப்படி உயிரை மாய்த்துக்கொள்வது என்று கருதித் தயங்கினாள். ஆனாலும் இனி, தன்னை—தன் நடத்தையையே சந்தேகித்த—சந்தேகித்தது மட்டுமல்லாமல் பழி சுமத்தி—குற்றஞ்சாட்டி அடித்துச் சித்திரவதை செய்த கணவனுடன் வாழ்வதில்லை என்று தீர்மானித்து விட்டாள். இம் மனப் போராட்டத்துக்கிடையில், மாதவன் நினைவு அவளுக்கு வந்தது. உடனே அவள் உள்ளத்தில் ஒளி பிரகாசித்தது. அவன் முனிசாமியிடம் கொண்டுள்ள பிரியத்தை எண்ணிப் பார்த்தாள். உடனே எழுந்து நடக்கலானாள் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு. அவள் போவதையே பார்த்து நின்றனர் பெண்கள்.

5

"இவ்வளவு நேரமாய்விட்டதே! என்ன அசௌகரியமோ! ஒருவேளை இன்று வரமாட்டீரோ என்று நினைத்தேன். அந்த மட்டும்...." என்று காத்தாயி முனிசாமியுடன் வந்து நின்றதைப் பார்த்ததும் சொன்ன மாதவன் அவள் முகத்தைப் பார்த்து திடுக்கிட்டு, "என்ன ஒரு மாதிரியா யிருக்கிறாய், உடம்புக்கு ஏதாயினும்...." என்று பதட்டத்துடன் கேட்டான்.

"ஒண்ணுமில்லேங்க—செலே சரியா முடிஞ்சிடிச்சுங்களா? இனிமே எனக்கு வேலையில்லேங்களே? நான் வர வேண்டாமே....?"

காத்தாயி பொங்கிவரும் மனப் பொருமலை அடக்கிக் கொண்டே படபடப்புடன் கேட்டாள்.

மாதவனின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. "என்ன காத்தாயி, வந்ததும் வராததுமாய், இப்படி படபடக்கிறாய்? என்ன சமாசாரம்?"

காத்தாயி ஒன்றும் சொல்லவில்லை. தலையைக் குனிந்துகொண்டிருந்தாள்.

"சிலையை ஒருவிதமாகச் செய்து முடித்துவிட்டேன், நீதான் போய்ப் பாரேன், உன்னைப்போல இருக்கிறதா என்று."

"எனக்கு என்ன தெரியுமுங்க. உங்களுக்குத் திருப்தியாயிருந்தா சரிதான்."

"சரி; உள்ளே வா, ஒரு தடவை ஒப்பிட்டுப் பார்த்து விடுகிறேன்...." என்று சொல்லிக்கொண்டே சித்திர கூடத்தை நோக்கிப் போனான். தன் பின்னலையைக் கட்டிக்கொண்டு காத்தாயியும் கூடப் போனாள்.

மாதவன் காத்தாயியைச் சிலையின் பக்கத்தில் நிற்க வைத்துவிட்டுச் சிறிது நேரம் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான். அவனுக்குக் குறைபாடாகத் தோன்றுகிற இடத்தில் தூரியத்தால் வெள்ளி வர்ணத்தைத் தீட்டிச் செப்பஞ் செய்தான். மண்ணைப் பிசைந்து வைத்து உருவாக்குகையிலும், சிற்பக் கருவிகளால் எத்தனையோ முறை சரிசெய்திருக்கிறான்: ஆனாலும், கடைசி முறையாக வர்ணமெல்லாம் பூசிய பின்னரும் திருத்தஞ் செய்வதற்கு இடமிருப்பதாக அவனுக்குத் தோன்றியதைக் கண்டு, சோகங் குடிகொண்டுள்ள அந்நிலையிலும் காத்தாயி வியப்படைந்தாள்.

"சரி; ஒரு விதமாக உன் சிலை பூர்த்தியடைந்தது" என்று மாதவன் திருப்தி தோன்றக் கூறினான்;

"அப்பா நான் போய் வரட்டுங்களா ?" என்று கேட்டவாறே, ஆரத்தில் மாதவன் கொடுத்த ஒரு சிறு பொம்மையை வைத்து ஆடிக்கொண்டிருந்த முனிசாமியைப் போய் அழைத்து வந்தாள்.

"என்ன இப்படி பறக்கிறாய் ? காத்தாயி !"

"ஒன்றுமில்லே, உடனே போகணுமுங்க."

"ஒன்றுமில்லை என்கிறாய் ? ஆனால் உடனே போக வேண்டும் என்கிறாய் ?.......என்ன விஷயத்தைத்தான் சொல்லேன் ...."

காத்தாயி காரணம் சொல்லி முடியாமல் திகைத்து நின்றாள். பின் ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு, "எங்க அப்பாருக்கு உடம்புக்கு....ஊரிலேருந்து உடனே வரணுமுன்னு சேதி வந்திருக்குங்க....போகணும்.... அதான்...." என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"எப்போது போகப் போகிறாய் ?"

"இப்பவே ! இன்னிக்கே !"

"போனால் எப்போது திரும்பி வருவாய் ?"

"எப்பன்னு சொல்ல முடியாதுங்க."

"அடடே ! உனக்குப் புடவை யொன்று எடுத்துக் கொடுத்து மரியாதை செய்யவேண்டுமென்று நினைத்தேனே !...."

"அதெல்லாம் எதுக்குங்க ? உங்க அன்பு இருந்தா போதாதுங்களா ?...."

"இல்லை ; சற்று இரு, காத்தாயி. ஆளை அனுப்பி உடனே சேலை,..."

"வாணாங்க, நான் உடனே போகணுமுங்க...."

"அப்படியா?" என்று கூறி யோசனையிலாழ்ந்து பின், மணிபர்ஸிலிருந்து, இரண்டு பத்து ரூபாய் நோட்டு களை எடுத்து, "இதை வைத்துக்கொள்" என்று காத்தாயி யிடம் கொடுத்தான். "ஊரிலிருந்து திரும்பி வந்ததும், இங்கே வந்து போ, என்ன!" என்றும் சொன்னான்.

காத்தாயி பணத்தை வாங்க மறுத்துவிட்டாள். "வாணவே வாணுமுங்க, எவ்வளவோ கொடுத்திருக்கி றீங்களே! அது போதாதா?"

மாதவன் வியப்பும் திகைப்பும் கொண்டு நின்று விட்டான்.

"அப்ப நான் போய் வாரேனுங்க" என்று கூறிப் புறப்பட்டாள்.

மாதவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

சோர்ந்த நடையுடன் காத்தாயி வெளியே போனாள். மாதவன் கால்களும் அவனை யறியாமல் அவள் பின்னே நடந்தன. சிறிது தூரஞ் சென்ற காத்தாயி தயங்கி நின்று மாதவனைத் திரும்பிப் பார்த்து, "ஒரு ஒத்தாசை பண்ணு வீங்களா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

"என்ன காத்தாயி, சொல்லு," என்று ஆவலுடன் கேட்டான்.

"ஒன்றுமில்லேங்க" என்று தயக்கத்துடன் சொல் லிய காத்தாயி துணிந்து, "முனியனை உங்களண்டை உட் டுட்டுப் போவலாமுன்னு நெனக்கிறேன்......"

"அதற்கென்ன? விட்டுவிட்டுப் போயேன்; பார்த்துக் கொள்ளுகிறேன்."

"பார்த்துக்குவீங்களா? கைவிடமாட்டீங்களே!...."

"என்ன, அப்படி சொல்கிறாய், காத்தாயி!...."

"உங்க புள்ளெமாதிரி பாத்துக்குறாம்...." என்று கூறியவாறு முனிசாமியை அவன் கையில் பிடித்துக் கொடுத்தாள் அவள்.

"ஆமா, அப்படியே?" என்று கூறியவாறு முனிசாமியைச் சேர்த்து அணைத்துக்கொண்டான்.

"உன் புருஷனும் கூட ஊருக்கு வருகிறானா?" என்று கேட்டான்.

மாதவனின் இக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது திணறிய காத்தாயி "ஊம்" கொட்டிக்கொண்டே நடந்தாள்.

தெரு வாசலை விட்டு வெளியேறும் போதுதான், "போய் வாறேனுங்க" என்று மெள்ளக் கூறி விடைபெற்றாள். தான் போவது பிள்ளைக்குத் தெரியக்கூடாதென்று எண்ணினாளோ! என்னவோ! தாயின் நெடும் பிரிவை அறியாது அந்த அந்தகப் பிள்ளை மாதவன் கைகளைப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தது. மாதவன் ஒன்றும் புரியாமல் காத்தாயி போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

6

"அம்மா! அம்மா!" என்று முனிசாமி அலறும் அலறல் மாதவனின் வீடு முழுதும் எதிரொலித்தது.

"ஐயோ! சிறிசு இப்படி வீறிட்டுக் கத்துகிறதே! தொண்டை என்னத்துக்கு ஆகும்? எப்படி பராக்கு காட்டினாலும் தாயின் ஞாபகம் மறக்கவில்லையே! இந்த இரண்டு நாளாய் என்னென்னவோ சமாதானப்படுத்திப்

பார்க்கிறேன். காத்தாயி ஊரிலிருந்து எப்போது வருவாளோ! அவள் கடைசியாகச் சொல்லிவிட்டுப் போனதைப் பார்த்தால்....! சே! அப்படியிருக்காது. அவள் முனியன்மேல் உயிரையே அல்லவா வைத்திருக்கிறாள்? சீக்கிரம் வந்து அழைத்துப் போவாள்...."

மாதவன் என்னென்னமோ எண்ணி மனம் உலைந்தான். இரண்டு நாளாக அவன் வேலையையுங் கவனிக்கவில்லை. பட்சணம் பலகாரம், பழம் பிஸ்கெட் எல்லாம் வாங்கிக் கொடுத்தான். விளையாட விதவிதமான பொம்மைகள், ஊதல் முதலியவை வரவழைத்துத் தந்தான். தூக்கி வைத்துக்கொண்டு பலவிதமாகப் பராக்கு காட்டினான். எதனாலும் முனியாயி சாந்தமடையவில்லை. சிறிது நேரங்கூடக் கண்ணுறங்கவில்லை. "அம்மா! அம்மா!" என்றுதான் சதா கதறலானான். எதையும் சாப்பிடவில்லை. "அம்மா எங்கே மாமா!" "அம்மாவண்டை இட்டுப் போய்விடு, மாமா!" என்று அடிக்கடி மாதவனைக் கேட்டுத் தொளைத்துக்கொண்டிருந்தான். "இதோ வந்துவிடுவாள். தாத்தாவைப் பார்த்துவிட்டு வரப்போயிருக்கிறாள்" என்று சமாதானஞ் சொல்லிப் பார்த்தான். சாந்தியப் படவேயில்லை. 'காத்தாயி வந்துவிட்டாளா என்று போய்ப் பார்த்துவிட்டு வருவோமா? வந்திருந்தால் உடனே அவள் வரமாட்டாளா? வேறு யாரையாயினும் ஒரு பெண்ணைத் தற்காலிகமாக இவனைக் கவனித்துக் கொள்ள நியமிக்கலாமா? அவளை அவன் அம்மா என்று சொல்லிவைப்பது? இவனுக்குத்தான் கண் தெரியாதே! ஆமாம்; அதுதான் சரி' என்ற முடிவுக்கு வந்தான்.

"என்ன, சத்தத்தைக் காணோம்! அழ முடியாமல் அலுத்துப் போயிருக்கிறானா? அல்லது....?" என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டே, முனியனைத் தேடிக் கொண்டு வெளி வராந்தாவிலிருந்து உள்ளே போனான். அறை அறையாகப் பார்த்தும், சிறுவனைக் காணவில்லை. தட்டுத் தடுமாறி எங்கு போயிருப்பான் என்று வியப்போடு சுற்றிப் பார்த்துக்கொண்டு, கடைசியாகப் பின்புறமுள்ள சித்திர கூடத்தினுள் நுழைந்து பார்த்தான்.

என்ன, ஆச்சரியம்! முனியன் அங்குதான் இருந்தான். அது மட்டுமா! அவன் காத்தாயியின் உருவச் சிலையைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்தான். 'ஐயோ! பல நாள் சிரமப்பட்டு அருமையாகச் செய்துள்ள சிலையை இவன் சாய்த்து உடைத்துவிடப் போகிறான்,' என்று எண்ணி மாதவன் பதறியோடினான்.

"வா, முனியா! அம்மாவண்டை போகலாம்" என்று சொல்லிக்கொண்டே அவன் கையைப் பற்றி இழுத்தான்.

முனியன் அச் சிலையை விட்டுவர மறுத்துவிட்டான்.

"ஊம்; ஊம். ஏமாத்தாதே மாமா! நான்தான் அம்மாவைக் கண்டுபிடிச்சிட்டேனே! இதான் அம்மா! இரண்டு நாளா அம்மாவை இங்கே ஒளிச்சி வைச்சிட்டு, 'தாத்தாவைப் பாக்கப் போயிருக்காங்க, வந்துடுவாங்க' என்று சொல்லி ஏச்சிகிட்டிருந்திங்களே!" என்று கூறியவாறு அச் சிலையை இன்னும் சேர்த்துக் கட்டிப் பிடித்துக் கொண்டு தொங்கினான்.

மாதவனுக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை, பையனையும் சிலையையும் மாறி மாறிப் பார்த்தான். அவ

வைக்கு விஷயம் புரிந்துவிட்டது. நன்கு அமைந்துவிட்ட காந்தாரியின் உருவச் சிலை அச்சிலையினை ஆக்கித்து விட்டது என்று அறிந்தான். அதே நாளைமாலை மன்னரைக் மென்மையாகி சகலரும் இந்தழகுள்ள உயிருள்ள பெண்ணாக அவனுக்குத் தோன்றியிருக்கிறது என்று உணர்ந்தான். இதிலிருந்து அவன் சிலை வடிப்பதில்—சிற்பக் கலையில்—இதுவரை காணாத வெற்றியை இச்சிலை வாயிலாகப் பெற்றுவிட்டதாகப் பெருமிதங் கொண்டான். 'என் ஜீவ லட்சியம் நிறைவேறிவிட்டது' என்று அவன் உள்ளம் பூரித்தது.

தந்தையின் வஞ்சம்

"ஸார், யாரோ ஒரு கிழவர் வந்திருக்கார். உங்களைப் பார்க்கணுமாம்" என்று தெரிவித்தான் ஹாஸ்டல் பியூன்.

சக மாணவர்கள் சிலருடன் 'செஸ்' (சதுரங்கம்) ஆடிக் கொண்டிருந்த சிதம்பரத்துக்குப் பியூன் வந்து கூறியது காதில் விழவில்லை. அவ்வளவுக்கு ஆட்டத்தில் அவன் கவனம் ஈடுபட்டிருந்தது.

பியூன் இரண்டாவது தடவை உரத்துக் கூறிய பிறகு தான், சிதம்பரம் தலை நிமிர்ந்து நோக்கினான்.

"யார், என்னையா?"

"ஆமாம், சார்."

"யார் தேடி வந்திருக்கிறார்கள் என்று சொன்னாய்?"

"யாரோ ஒரு கிழவர்."

"கிழவரா?"

"ஏன்? எவளேனும் குமரி யொருத்தி தேடி வந்திருப்பாளென்று நினைத்தாயா?" என்று நண்பனொருவன் கிண்டல் பண்ணினான்.

இந்தக் கேலிப் பேச்சு அவனுக்குச் சந்தோஷமுண்டாக்கியதாயினும், வெளிக்குக் கோபங்கொண்டவன் போல் பாவனை செய்து, "சட்! உளறாதே!" என்று கடிந்து கொண்டான். பின் அவன் பியூனைப் பார்த்து, "அந்தக் கிழவன் யார்? எங்கிருந்து வந்தான்? எதற்காக என்னைப் பார்க்க வேண்டுமாம்? இதையெல்லாம் விசாரிக்காமல், யாரோ பார்க்க வந்திருக்கிறார் என்று சொல்ல வந்து விட்டாயே? முட்டாள்! வழியே போகிறவன் வருகிறவன் எல்லாம் பார்க்க வேண்டுமென்றால், உடனே நாங்கள் பேட்டி யளிக்க வேண்டும். இதைவிட எங்களுக்கு வேறு வேலையில்லை என்பது உன் எண்ணமா?......" என்று அதிகார தோரணையில் கேட்டுத் தடபுடல் பண்ணினான்.

பியூன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் சிதம்பரம், "சரி, சரி: போய் அந்த ஆளை அழைத்து வா, நீ ஒன்றும் சமாதானம் சொல்லவேண்டாம்" என்று சொன்னான்.

பியூன், சிதம்பரத்தைப்போல் எத்தனையோ பேரைப் பார்த்து அனுபவப் பட்டவன். ஆதலால், அவன் சிதம்பரத்தின் தடபுடலுக்குச் சிறிதும் அஞ்சாமல், சாவதானமாகவே பதில் கூறத் தொடங்கினான். "இல்லை, சார்: நான் அதெல்லாம் கேட்காமையா, உங்களிடம் வந்து சொல்லுவேன்னு நினைச்சிங்க? கந்தசாமி உடையாருன்னு நீங்க தெரிஞ்சிக்குவீங்கன்னு சொன்னார். உங்க ஊரிலே

ருந்து தான் வாருராம். முகஜாடையைப் பார்த்தா உங்க அப்பாவா யிருக்குமோன்னு......"

சிதம்பரம் பதட்டத்துடன், "நிறுத்துடா, உன் அதிகப் பிரசங்கத்தை! போ; அந்தக் கிழவனை நானே போய்ப் பார்த்துக்கொள்கிறேன். இங்கே கூப்பிட்டு வரவேண்டாம்!" என்று உரைத்தவாறே, கையிலிருந்த கழற் காயைப் போட்டுவிட்டு எழுந்தான்.

"என்ன சிதம்பரம், 'கேமை' நடுவே விட்டுட்டுப் போகிறாய்?...."

"எவனோ ஊரிலிருந்து வந்திருக்கான்னு சொன்னதுமே ஓடுகிறாயே!"

"பியூன் சொன்னானே, இவன் அப்பா போல இருக்கிறது என்று. அதான்டா, அலறியடித்துக்கிட்டு ஓடறான். 'பாதர்'ன்னு பாசம் இருக்காதாடா!"

இவ்விதமாக, சகாக்கள் சிதம்பரத்தைக் 'கோட்டா' பண்ணினர்.

சிதம்பரம் எரிச்சலோடு, "எந்தப் 'புரூட்'டோ, பார்த்துவிட்டு வருகிறேன், பிரதர்! ஒரே நொடியில் வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு விரைந்து வெளியேற முயன்றான்.

இதற்குள் பியூன் குறிப்பிட்ட கிழவர், "சிதம்பரம், சிதம்பரம்!....எங்கே இல்லையா, பிள்ளையாண்டான்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே அடியெடுத்து வைத்தார். அவர் கையில் பிடித்து ஊன்றி வந்த தடி, 'தட், தட்' எனச் சப்தஞ் செய்தது.

கிழவரைக் கண்டதுமே, சிதம்பரம் திகைத்து நின்று விட்டான். அவன் முகத்தில் 'ஜிவ்'வென இரத்தம் ஏறியது. வந்த கிழவர் இவனுடைய தந்தைதான். பியூன் பெயரைச் சொன்னபோதே, சிதம்பரம் தன் தகப்பனார் தான் வந்திருக்கிறார் எனத் தெரிந்து கொண்டானாயினும் நேரில் பார்த்ததுமே, எதிர்பாராத தொன்றைக் கண்டதுபோல் அதிர்ச்சி கொண்டான். ஏனென்றால், அவன் இருக்கும் டாம்பீக நிலைக்குப் பட்டிக் காட்டு ஆசாரப் பஞ்சைக் கோலத்தில் தந்தை வந்திருப்பதை அவமானமாகக் கருதினான். அவன் அஞ்சியதுபோலவே, அவனுடைய சிநேகிதர்கள், கிழவர் முழங்காலுக்குமேல் வேஷ்டியும், உடம்பில் துந்தாவும் தலையில் ஹைதர் காலத்துப் பாகையும் உடுத்தியிருந்ததையும், காதுகளில் சிவப்புக் கல் கடுக்கனும், இடக் கை விரல் ஒன்றில் பஞ்சலோகத்தாலாகிய மோதிரம் அணிந்திருந்ததையும் கண்டு நையாண்டி செய்து கொண்டிருந்தனர்.

இந்த அவமான உணர்ச்சி அவன் உள்ளத்தில் ஆத்திரத்தை எழுப்பியது. "யாரது?" என்ற அதட்டலுடன் கிழவர் உள்ளே வருவதைத் தடுத்து நிறுத்துவதுபோல், எதிரே போனான்.

"நான்தான், அப்பா!" என்று குழைவுடன் கூறிய கிழவர், "சிதம்பரமா, அது?" என்று கேட்டவாறு தடியை இடக் கையில் மாற்றிக்கொண்டு வலக் கையை நெற்றிமேல் வைத்து நிமிர்ந்து சிதம்பரத்தைப் பார்க்கலானார்.

"ஆமாம், அவர்தான், இவரைத்தானே நீங்க கேட்டீங்க, பெரியவரே?" என்று கதவண்டை நின்றிருந்த பியூன் கேட்டு ஆளை இனங் காட்டினான்.

"நீ போய் உன் வேலையைப் பாருடா!" என்று சிதம்பரம் அவன்மீது சீறி விழுந்தான். "அறிமுகப் படுத்த வந்துவிட்டான்" என்று தனக்குள்ளாகவே முணு முணுத்துக்கொண்டு தகப்பனாரைப் பார்த்து, "சரி, சரி; இப்படி வா" என்று தன் அறைக்குள் கூப்பிட்டுக் கொண்டு போனான். மகனின் வெடுவெடுப்பைக் கவனி யாத கந்தசாமி உடையார் அவன் பின்னே தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றார்.

தன் அறையை அடைந்ததுமே சிதம்பரம் கதவைத் 'தடா'லெனச் சாத்தினான். அவன் கோபம் உச்ச நிலையை யடைந்திருந்தது. கண்ணாலேயே எரித்து விடுபவன்போல் தகப்பனாரைப் பார்த்து, "என்ன சமாச்சாரம்? ஏன் இங்கே வந்தாய்?" என்று கேட்டான்.

இக் கேள்வி கந்தசாமி உடையாரை ஒரு கணம் திகைக்க வைத்தது. பின் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "கண்ணிலேயே இருந்தது; பார்க்கலாமென்று வந்தேன்" என்று தயக்கத்துடன் சொன்னார்.

"இப்போது பார்த்தாயிற்றே, இல்லையோ?"

"என்னப்பா, இப்படிப் பேசுகிறாய்?"

"பின்னே என்ன? இப்போது என்ன குடி முழுகிப் போயிற்று என்று எண்ணி ஊரிலிருந்து ஓடி வந்தாய்?"

"உன்னைப் பார்க்க வரக் கூடாதா?"

"என்னை என்ன பார்க்கிறது என்கிறேன். நான் கரைந்துபோய் விட்டேனா, அப்படியே இருக்கிறேனா என்று பார்க்க வந்தாய்?"

"என்ன சிதம்பரம், என்னென்னவோ பேசுகிறாயே?"

"நான் எத்தனை தரம் உனக்குச் சொல்லியிருக்கிறேன், என்னைப் பார்க்க இங்கே வராதே என்று? அதைக் கேட்காமல் வந்து என் மானத்தை வாங்குகிறாயே!........"

"நான் உன்னைப் பார்க்க வருவது உனக்கு அவமானமாகவா இருக்கிறது? அப்படியானால் இனிமேல் நான் வரவில்லை, அப்பா !"

"நீ அடிக்கடி வந்து பார்த்தால்தான், பிள்ளை மேலே உருகிப் போகிறாய் என்று மற்றவர்களுக்குத் தெரியும் போலே இருக்கு........"

"மனசு கேட்காமல் வந்து பிள்ளையைப் பார்க்கிறது கூடவா குற்றம்? அட கடவுளே!" என்று கிழவர் தலையில் அடித்துக் கொண்டார். கைத்தடி நழுவி விழுந்தது. அவர் சிரமத்துடன் அதைக் குனிந்து எடுக்கலானார். இந் நிலை சிதம்பரத்தின் கோபத்தை ஓரளவு தணிக்கத்தான் செய்தது. "நான்தான் அடிக்கடி கடிதம் எழுதுகிறேனே! லீவு விடுகிற போதெல்லாம் ஊருக்கு வருகிறேன். அப்படியிருக்க..........." என்று மேலே பேச முடியாமல் நிறுத்தினான்.

"எல்லா லீவுக்கும் எங்கே அப்பா வந்தாய்?.... ஊம்....அதெல்லாம் சொன்னால் கூட உனக்குக் கோபம் வரும். தசரா, பொங்கல் பண்டிகைக்குக்கூட நீ ஊருக்கு வராமற் போகவேதான், என்னமோ ஏதோ என்று எங்கள் மனசு அடித்துக்கொண்டது....அவள் வேறே நச்சரித்துக்கொண்டிருந்தாள், 'போய்ப் பார்த்துவிட்டு வா! போய்ப் பார்த்துவிட்டு வா' என்று. அத்துடன், உனக்குப் பெண் கொடுக்க நம்ம உறவின்முறையார் தூதுவிட்டுக்

கொண்டிருக்கிறார்கள். அதையும் சொல்லிவிட்டுப் போக லாம் என்றும் எண்ணி வந்தேன்....''

சிதம்பரநாதருக்கு மீண்டும் கோபமுண்டாயிற்று. ''எனக்குத் தெரியுமே! சோழியன் குடுமி சும்மா ஆடுமா? இப்போது யாரையோ தூது விட்டுப் பெரிய இடத்தைப் பிடித்திருக்கிறாய் போலிருக்கு. அதற்கு என்னைச் சரிக் கட்டத்தானே வந்தாய்? இதை முதலிலே சொல்லாமல், 'கண்ணிலேயே இருந்தது; மனசு அடித்துக்கொண்டது; அம்மா பார்த்துவிட்டு வரச் சொன்னாள்' என்றெல்லாம் ஏன் கதை அளந்தாய் என்று கேட்கிறேன். என் கலியா ணத்தைப் பற்றிப் பேச்சு எடுக்காதீர்கள் என்று எத்தனை முறை உங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன்? கலியா ணஞ் செய்து கொள்ளப் போகிறவன் நானா, நீங்களா? எப்போது பண்ணிக் கொள்கிறது என்று எனக்குத் தெரியும். பெண் பார்க்கிற கஷ்டம்கூட உங்களுக்கு வேண்டாம்....நான் சொல்லுகிறது தெரிகிறதா....? ஆமாம் ....'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினான்.

கிழவர் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

''சரி, இவ்வளவுதானே விஷயம்? இனி நீ போய் விட்டு வரலாம். எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது....'' என்று, அவரைத் துரிதமாக அவ்விடத்தை விட்டு வெளி யேற்றும் நோக்கத்தோடு, அவசரத்தைக் காட்டிப் பேசினான்.

''சரி, அப்பா; நான் போய்வருகிறேன். எனக்காக நீ ஒன்றும் கஷ்டப் படாதே, அப்பா! உன் ஜோலியைப் போய்ப் பாரு'' என்று தழுதழுத்த குரலில் சொல்லிக் கொண்டே கிழவர் தள்ளாடித் தள்ளாடி நடக்கலானார்.

தகப்பனார் வருத்தத்துடன் போவதைப் பற்றி, சிதம்பரம் சிறிதும் லட்சியஞ் செய்யவில்லை. அறைக் கதவைச் சாத்திக்கொண்டு, சிநேகிதர்கள் இருக்கும் அறைக்கு விரைந்து சென்றான்.

கந்தசாமி உடையார் தம்மைக் கடந்து முன்னே போகும் மகனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டே நடக்கலானார்.

சிதம்பரம் கதவைத் திறந்துகொண்டு வந்த ஓசையைக் கேட்டு, 'செஸ்' ஆடிக்கொண்டிருந்த சிநேகிதர்கள் நிமிர்ந்து பார்த்தனர்.

"சிதம்பரம் வந்துட்டான், ஜார்ஜ்! ஆட்டத்தைப் புதுசாகத் தொடங்குவோம். என்ன?...." என்றான் ஒருவன்.

"சரி, அப்படியே செய்துடலாம்" என்று கூறி ஜார்ஜ் ஆட்டத்தைக் கலைத்தான்.

"ஆமாம்: வந்தது யாருடா? உங்க அப்பாவா? ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்தயே! என்னவாம் சமாச்சாரம்?" என்று கேட்டான் சுதர்சனம்.

"ஒன்றுமில்லை. எங்க அப்பா கழனிக்கு ஒரு 'பம்பிங் மிஷின்' வாங்கி யனுப்பச்சொல்லிப் பணம் கொடுத்து விட்டிருக்கிறார்" என்று சிறிதும் தயங்காமல், சமயோசிதமாகப் பதிலளித்தான்.

"அப்படியானால், வந்த ஆள் உங்க அப்பா இல்லியா?"

"என்னடா, மடையன் மாதிரி உளறுகிறாய்? எங்கள் பண்ணையாளைப் போய் அப்பா என்கிறாயே!"

அப்போதுதான் அந்த அறையைக் கடந்து போய்க்கொண்டிருந்த கந்தசாமி உடையாரின் காதில் சிதம்பரம் சொல்லிய இச் சொல் விழுந்தது. அவர் அப்படியே அயர்ந்துபோய் நின்றுவிட்டார். தம்மைச் சமாளித்துக்கொள்ள அவருக்குச் சில விநாடிகள் பிடித்தன. "நான் பண்ணையாளாமே?—ஆமாம்; அவன் இருக்கிற 'டீக்'குக்கு என்னை அவன் அப்பா என்று சொல்லிக்கொள்ள வெட்கமாகத்தான் இருக்கும்" என்று அவர் தாமாகவே சொல்லிக் கொண்டு நடக்கலானார்.

2

கந்தசாமி உடையாருக்குக் கொஞ்சத்தில் மனம் ஆறுதலடையவில்லை. குமாரனைப் பார்க்கப்போன இடத்தில் ஏற்பட்ட அநுபவத்தையும் அவமானத்தையும் அவர் வழி நெடுக எண்ணிக்கொண்டே போனார். 'அந்தக் காலேஜிலே படிக்கிறவர்கள் எல்லாம் சீமான் வீட்டுப் பிள்ளைகள் தானா? என்னைப்போல ஏழைகளின் குமாரர்கள் ஒருவர் கூடப் படிக்கவில்லையா? அவர்களைப் பார்க்கப் பெற்றோர் வருவதில்லையா? அப்படி வருபவர்கள் எல்லாம் பகட்டும் படாடோபமுமாகவா இருப்பார்கள்?' இக் கேள்விகள் அவருடைய நொந்த உள்ளத்திலிருந்து எழலாயின.

'என்ன காலம் இது? மேனாட்டுப் படிப்பும் நாகரிகமும், பெற்ற தகப்பனைப் பண்ணையாள் என்று சொல்லச் செய்கின்றன! இப்படி என்னைச் சொல்வதற்குத்தானா இவனை இவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்க வைத்து வருகிறேன்? எப்படி இருந்தவன் எப்படி ஆய்விட்டான்! காலேஜ் படிப்பும் பட்டண வாசமும் ஆளை அடியோடு

பாத்திவிட்டனவே! பிள்ளையைப் பார்க்கவேண்டும் என்று எவ்வளவு ஆவலாக வந்தேன்? பரிவோடு பார்க்க வந்த தகப்பனை 'வா, அப்பா!' என்று அன்புடன் வரவேற்று உபசரித்தானா? 'வீட்டில் அம்மா எல்லாம் சௌக்கியமா?' என்று ஆதுரத்துடன் விசாரித்தானா? ஊஹூம்:—இதெல்லாம் கேட்காமல் போனாலும் பரவாயில்லை. 'ஏன் இங்கே வந்தாய்?' என்றல்லவா கேட்டான்? இப்படிக் கேட்க அவனுக்கு மனம் எப்படி வந்தது? பெற்று வளர்த்த தகப்பன் வந்து பார்க்கிறதை அவமானம் எனக் கருதுகிறவன்—தந்தையைச் சிநேகிதர்களுக்கு 'எங்கள் பண்ணையாள்' எனச் சொன்னவன்—'ஏன் வந்தாய்?' என்று மட்டுந்தானா கேட்பான்? அதற்கு மேலும் கேட்பான். ஊஹும்; இவனை ஆளாக்க—படிக்க வைத்துப் பெரியவனாக்க—என்ன பாடு பட்டேன்?—எவ்வளவு கஷ்டம் எடுத்துக் கொண்டேன்?..........'

இவ்விதம் எண்ணியபோதே அவர் கண்களில் நீர் நிரம்பி வழிந்தோடியது.

கந்தசாமி உடையார் சிதம்பரத்தை வளர்க்கச் சிரமப் பட்டதைப்போல, பாடுபட்டவர்கள் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள். இவருக்குச் சிதம்பரம் மட்டும் பிள்ளையாய் இருந்திருந்தால், 'ஒரே பிள்ளை; அதனால் தான் அருமையாக வளர்க்கிறார்' என்று சொல்லலாம். அவருக்கு அவன் மட்டுமல்ல; மற்றும் இரு ஆண்களும், நான்கு பெண்களும் இருக்கின்றனர். அப்படியிருந்தும், அவர் அவன் விஷயத்தில் மட்டும் எல்லா வகையிலும் விசேஷ சிரத்தை காட்டி வரலானார்.

கந்தசாமி உடையார் ஏழையானாலும் கல்விச் செல்வம் வாய்ந்தவர். நல்ல தமிழ் இலக்கியப் புலமை அவருக்கு

இருந்தது. அதனால் அவர் பண்ணுருட்டி மக்களால் நன்கு மதிக்கப்பட்டு வந்தார். ஊர் நாட்டாண்மைக்காரர் உட்பட எல்லோரும் உடையாரிடம் மரியாதை காட்டி வந்தனர். அவருடைய நற்பண்பும் நல்லொழுக்கமும் பிறரை வெகுவாகக் கவர்ந்தன.

கந்தசாமி உடையார் மண் பாண்டங்கள், பொம்மைகள் செய்து விற்று, அதன் வருவாயைக் கொண்டு குடும்பத்தையும் கௌரவமாக நடத்தித் தம் பிள்ளைகளையும் நன்கு படிக்க வைத்து வந்தார். அவர் சம்பாதனையில் பெரும் பகுதி சிதம்பரத்தின் படிப்புக்குத் தான் செலவாயிற்று. அவனை ஆங்கிலக் கல்வியில் உயர்தரப் பட்டம் பெறச் செய்து, சர்க்கார் உத்தியோகத்தில் தகுந்தபடி அமர்த்த வேண்டுமென்பது அவருக்கு ஆசை. அதனாலேயே, தள்ளாமையினால், முன்போல் அதிகமாகச் சம்பாதிக்க முடியாமலிருந்தும், நகை நட்டுகளை விற்றும், நிலபுலன்களை அடமானம் வைத்தும், சிதம்பரத்தைச் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்தார்.

இவ்வளவு ஆயாசத்துடன் சிரமப்பட்டுப் படிக்க வைத்த பிள்ளை தம்மைத் தகப்பனென்று சொல்ல வெட்கப்படுகிறானென்றால்—'ஏன் வந்து என் மானத்தை வாங்குகிறாய்?' என்று கேட்கிறானென்றால்—அதை அவரால் எப்படிப் பொறுக்க முடியும்? இந்தப் பட்டிக்காட்டுத் தந்தையில்லாமல், இவன் எப்படிப் பட்டணத்திலே பட்டப் படிப்புப் படிக்க வந்து விட்டான்? இவன் சொன்னபடி பண்ணையாள் போன்றிருக்கும் என்னுடைய பணத்தைக் கொண்டுதானே சீமான்களின் பிள்ளைகளோடு

சிமாறைப் உலாவி வருகிறான்? நான் ஒருமாதம் பணம் அனுப்பா விட்டால் இவன் ஜம்பமும் டாம்பிகமும் என்னா கும்?—ஊம்: இருக்கட்டும்......" என்று அவர் தமக்குள் கறுவிக் கொண்டார்.

3

வேங்கடாசல உடையார் பங்களாவில் நடந்த திருமண வைபவம் புதுச்சேரி முழுவதுமே கலகலப்பை யுண்டு பண்ணியது. பொதுவாக, கலியாணச் சிறப்பைப் பற்றி யும், விவாகத்தின் ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் அதில் கலந்துகொண்டவர்களும், அதற்குப் போகாமலே கேள்விப் பட்டவர்களும் பலவிதமாகப் பேசிக்கொண் டார்கள்.

வேங்கடாசல உடையார் தமது ஒரே மகளுக்கு அவ்வளவு சிறப்பாக விவாகஞ் செய்வித்துப் பெருமகிழ்ச்சி கொண்டார். அவர்கள் சாதியிலேயே முதன் முதலாகப் பாடசாலைகளின் மேற்பார்வை யாளராகச் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் சிதம்பரம் பிள்ளையல்லவா இவர் மகளுக்குக் கணவனாக வாய்த்திருக்கிறார்? இப்பேர்ப் பட்ட உயர்ந்த சம்பந்தம் சாமானியமாகக் கிடைக்கக் கூடியதா? அந்தச் சிறப்பைக் கொண்டாட எவ்வளவு செலவு செய்தாலென்ன? இந்தப் பெருமித எண்ணத் தோடு தான் வேங்கடாசல உடையார் தம் பெண் கலியா ணத்துக்குத் தாராளமாகச் செலவு செய்து பலரையும் பிரமிக்க வைத்தார். அந்த ஊரில் செல்வமும் செல்வாக் கும் உடைய ஒரு சிலரில் வேங்கடாசல உடையார் குறிப் பிடத் தக்கவர்; ஆதலால், இவர் வீட்டுக் கலியாணத் துக்குப் புதுச்சேரி கவர்னர் உட்பட, சர்க்கார் அதிகாரி

களும் பிரமுகர்களும் வந்திருந்ததில் ஆச்சரியமில்லை. கந்தசாமி உடையார், சிதம்பரம் இருவரின் சார்பிலும் முறையே அநேக பெரிய மனிதர்களும், சிநேகிதர்களும், வந்திருந்தனர்.

இசை யரங்க நிகழ்ச்சிக்கென்றே பிரம்மாண்டமாகப் போடப்பட்ட தனிப் பந்தலில் அன்று மாலை மனோகரமான ஷண்முக வடிவினுடைய சங்கீதக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. மணமகனும் மணமகளும் அழகாக அலங்கரிக்கப்பட்ட புஷ்ப விமானமொன்றில் உட்கார வைக்கப்பட்டிருந்தனர். அவர்களை முன்னிலையாகக் கொண்டு தான் பாடகி கச்சேரி செய்துகொண்டிருந்தாள்.

சிதம்பரம் மகிழ்ச்சியே உருவாக மணமகள் பக்கத்தில் அமர்ந்திருந்தான். வாழ்க்கையில் அடைய வேண்டிய சகல சம்பத்தையும் தான் அடைந்து விட்டதாக அவன் உள்ளம் கொண்டிருந்த பூரிப்பு அவனுடைய முகத்தில் நன்கு காணப்பட்டது. அவனுக்கு ஆப்த நண்பர்களும், உத்தியோகத்தில் நெருங்கிய தொடர்புடையவர்களும் கச்சேரிக்கு வரும்போதும் போகும்போதும் அவனை அணுகித் தங்களின் மகிழ்ச்சியையும் மரியாதையையும் தெரிவித்துக் கைகுலுக்கி விட்டுப் போய்க்கொண்டிருந்தனர்.

கச்சேரி வெகு ஜோராக நடந்துகொண்டிருந்தது. விருந்தினர்கள் பாடகி பாடும் இன்னிசையை அனுபவித்துக் கொண்டிருந்தனர். விருந்தினர்களுக்கு மின்சார விசிறிகள் வாயிலாக வரும் காற்று போதாதென்று ஆட்கள் வேறு பெரிய பெரிய கை விசிறிகளைக் கொண்டு விசிறிக் காற்று வரச் செய்துகொண்டிருந்தனர்.

இச் சமயத்தில் விருந்தினர்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்த வேங்கடாசல உடையார், தற்செயலாக எதையோ கவனித்துவிட்டுத் தாம் நின்றிருந்த இடத்தை விட்டுப் பதறியோடி வந்தவராய், "அண்ணு, என்ன இது? என்ன வேலை செய்கிறீர்கள்........?" என்று கேட்டவாறு மணமக்கள் இருக்கும் பக்கமாக நின்று பெரிய விசிறி யொன்றைப் பிடித்து விசிறிக்கொண்டிருந்த கிழவரொருவருடைய கையைப் பிடித்துக்கொண்டார். அப்போதுதான் எல்லோரும் அந்த மனிதரைப் பார்த்தனர். சிதம்பரமும் அச்சமயம்தான் நோக்கினன். உடனே அவன் முகம் கறுத்து விட்டது. அவ்விடத்தில் விசிறி யெடுத்து விசிறிக் கொண்டிருந்தவர் வேறு யாருமில்லை; அவனுடைய சாக்ஷாத் தகப்பனுர்தான்! அவர் முழங்காலுக்கு மேல் வேஷ்டியும் தலையில் முண்டாசும் கட்டிக்கொண்டிருந்தார். உடம்பில் சட்டை பெயருக்குமில்லை. மற்ற வேலையாட்களாயினும் இடத்துக்குத் தகுந்தபடி உடையுடுத்திக் கொண்டிருந்தனர். அதுகூட இல்லாமல் குக்கிராமத்தில் வசிக்கும் ஏழை உழவனைப்போன்ற தோற்றத்தில் அவர் காணப்பட்டார். இக்கோலத்தைக் கண்டு எல்லோருமே திகைப்புற்றனர்.

வேங்கடாசல உடையாரைப் போலவே, மற்றும் பலர் அவரை அணுகி, அவர் கையிலுள்ள விசிறியைப் பிடுங்கி விசிற வொட்டாமல் தடுக்க முயன்றனர். இதற்குள் அவருடைய சின்னப் பிள்ளைகள் இருவரும் தகவலறிந்து ஓடி வந்தனர்.

மூத்தவன், "அப்பா என்ன இது! சட்டையை யெல்லாம் கழட்டிப் போட்டுவிட்டு வந்து, இப்படி நிற்கிறீர்களே! உங்களை யார் விசிறச் சொன்னது?" என்று கேட்டான்.

"இதுவரை எங்கே இருந்தீர்கள்? சாயங்காலத்தி லிருந்து உங்களை எங்கெங்கெல்லாம் தேடுகிறேம்!" என்று இளையவன் வினவினன்.

கந்தசாமி உடையார் கச்சேரி தொடங்கு முன்பே, பணியாட்களோடு ஆளாய்க் கலந்துகொண்டார் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது.

இளையவன் அவருடைய சட்டை, உத்தரீயம் முதலிய வற்றை எடுத்துவர ஓடினன்.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் நடந்தும் கந்தசாமி உடையார் சிறிதும் சலனமுறவில்லை. அவர் மிக அமைதி யாக, "ஏன்? நான் என்ன செய்கிறேன்? நான் செய்ய வேண்டிய பணியையன்றே செய்கிறேன்? இதை நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்?" என்று வினவினர்.

வேங்கடாசல உடையார், "நீங்கள் செய்யக்கூடிய பணியா இது, அண்ணு! சம்பந்தியாக உள்ள நீங்கள்....." என்று ஆதங்கத்துடன் சொல்லிக்கொண்டே போனர்.

அவரைத் தொடர்ந்தே மற்றுஞ் சிலர், "ஆமாம் அண்ணு! நீங்கள் இப்படிச் செய்யலாமா?........" என்று கூறி அங்கலாய்த்தனர்.

"நான் சம்பந்தியா? யார் சொன்னது?........நான் மாப்பிள்ளை வீட்டுப் பண்ணையாள் ஐயா! இது உங்களுக் குத் தெரியாதா? இதுவரை இதை யாரும் உங்களுக்குச் சொல்லவில்லையா?........" என்று கூறிவிட்டு, கந்தசாமி உடையார் சிதம்பரத்தைக் குறும்பாக நோக்கி, "என்ன மாப்பிள்ளை, நீங்கள்தான் இவர்களுக்குச் சொல்லுங்கள். நான்........" என்று கூறி, மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

இதைக் கேட்டவுடனே பக்கத்திலிருந்த இரண்டாவது குமாரனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. சந்தசாமி உடையார், சிதம்பரம் சக மாணவர்களிடம் தம்மைப் 'பண்ணையா'ளென்று சொன்ன விஷயத்தைச் சொல்லி வருத்தப்பட்டது அவன் நினைவுக்கு வந்தது. அண்ணன் செய்த தவற்றைத் தக்க சமயத்தில் சுட்டி இருந்துக் காட்டுகிறார் என்று உணர்ந்த அவன், நிலைமை இன்னும் மோசமாய் விடக்கூடாதென்று எண்ணி, "என்ன அப்பாவுக்கு இருந்தாற்போலிருந்து புத்தி பேதலித்து விட்டது" என்று சமயோசிதமாகக் கூறிக்கொண்டே, "வா, அப்பா!" என்று கூப்பிட்டவாறு அவரைப் பரபரவென இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

சிதம்பரத்தின் நிலைமையோ பரிதபிக்கத் தக்கதாயிருந்தது. தந்தை கூறிய ஒவ்வொரு சொல்லும் கூரிய வேல்போல் அவனுள்ளத்தை ஊடுருவிச் சென்றது. அவர், "நான் மாப்பிள்ளை விட்டின் பண்ணையாள்" என்று சொன்னபோது, 'பண்ணையாள்' என்பதை அழுத்திச் சொன்னதுமே, நாலு வருஷங்களுக்கு முன், தான் தன் சக மாணவர்களிடம், 'எங்கள் பண்ணையாள்' என்று தன்னைப் பார்க்க வந்த தகப்பனை அறிமுகப் படுத்தியது ஞாபகத்துக்கு வந்தது. 'பெற்ற தகப்பனுக்கு எவ்வளவு மகத்தான அபசாரம் செய்துவிட்டோம். அவர் உள்ளத்தை எவ்வளவு புண்படுத்தி விட்டோம்' என்பதை அவன் அந்தச் சமயத்தில் தான் உணர்ந்தான். அந்த உணர்ச்சி அவன் உள்ளத்தை உருக்கிவிட்டது. அவனையறியாமல் அவன் கண்களில் நீர் ததும்பியது. விஷயம் புரியாமல் மனைமகள் கணவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அவளுடைய பார்வையிலிருந்து தப்ப அவன் தலையைக் குனிந்து கொண்டான். குனிந்த தலை நிமிரவேயில்லை.

ஹம்ஸாநந்தி

அவள் ஒரு பாடகி; நடிகையும் கூட. அது மட்டுமல்ல; நாட்டிய மாடவும் செய்வாள். அவள் குரல் அமுதத்தால் இயன்றதோ என்று வியக்கும்படியாக அவ்வளவு இனிமையாக இருக்கும். அவள் தன் இனிய சாரீர மெடுத்துப் பாடத்தொடங்கிவிட்டாலோ கந்தருவ கானம் —நாரத கானம்கூட கெட்டது; அவ்வளவு அற்புதமாக இருக்கும். அவள் வீணையை மீட்டி அதனுடன் இசைந்து பாட ஆரம்பிப்பாளானால், ஸாக்ஷாத் சாரதா தேவியே பிரசன்னமாகி வீணையை மீட்டிப் பாடுவது போன்ற பிரமை யாருக்கும் ஏற்படும். நடிப்போ சொல்லவேண்டியதில்லை. நடிப்புக்கே அவள் புகலிடம்போ லிருந்தாள். பரத நாட்டியத்திலோ என்றால், அந்தப் பரத முனிவரே இவளிடம் பிச்சை வாங்கவேண்டும்; அவ்வளவு லளிதமாகப் பரத நாட்டிய மாடுவாள். ஆகவே, அவள் இசை, நாடகம், நடனம் ஆகிய மூன்று கலைகளிலும் ஒருங்கே பெரும் பெயர்

பெற்றிருந்தாள். இம்மூன்று கலைகளிலும் அவள் எதில் அதிக திறமை வாய்ந்திருந்தாள் என்று சொல்வது அருமை; ஆயினும், நடிப்பு, நாட்டியங்களைவிட, வாய்ப்பாட்டில் அவள் சிகரமாய் இருந்தாளென்றே சொல்ல வேண்டும். ஏனென்றால், அவளுடைய மோகன கானமொன்றே பெரிய கலைஞர்கள் முதல் பாமர ரஸிகர்கள் வரையில் யாவரையும் தன் வயப்படுத்தியது. வாய்ப்பாட்டு ஒன்றினாலேயே அவள் குமரி முதல் வேங்கடம் வரை மட்டு மல்ல; இமயம் வரை பெரும் பிரசித்தி பெற்றிருந்தாள். அவளுடைய கோகில கானத்தில் உள்ளங்களைப் பறி கொடுத்தவர்கள் அவள்பால் வேறு எவ்வித கலா வல்லபத்தையும் எதிர்பார்க்கவேயில்லை. ஆனாலும், அவள் மட்டும் தான் கற்றுவந்த ஒவ்வொரு கலையிலும் சிரத்தை செலுத்தி நாளுக்கு நாள் அபிவிருத்தி செய்து கொண்டு வந்து, தமிழ் நாட்டில் மட்டு மல்லாமல், பாரத முழுதும் தன்னிகரற்று விளங்க முயன்று வந்தாள். இதன் பயனாக 'ஹம்ஸாநந்தி'—அதுதான் அவள் பெயர் என்றால், கலா ரஸிகர்கள் மட்டுமல்லாமல், மற்றவர்களும் அறிந்து புகழ்ந்து பாராட்டக்கூடிய உயர்நிலை உண்டாயிற்று. அவளுக்குப் புகழ் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருந்ததோ, அவ்வளவுக் கவ்வளவு அவளைப்பற்றி இழிவான அபிப்பிராயமும் பரவி இருந்தது. அவளுக்குப் பிரசித்தி ஏற்பட ஏற்பட, அவளைப்பற்றிப் பலவிதமான கட்டுக் கதைகள் அதிகமாகிக்கொண்டே வந்தன. அவளது உடல் வனப்பிலும் கலா வல்லபத்திலும் மிகவும் கவர்ச்சி கொண்ட மக்கள் அவளது அந்தரங்க வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பதிலும் அதுபற்றி வாய்க்கு வந்தவாறு வம்பளப்பதிலும் ஒருவித இன்பத்தைக் கண்டனர்.

அவர்கள் ஹம்ஸாநந்தியைப் பற்றி அக்கப் போர் செய்வதற்குக் காரணமும் இருந்தது. அவள் ஒரு தாசிப் பெண். உருத்திர கணிகையர் குலத்தில் உதித்தவள். இருபது வயதாகியும் அவள் இன்னும் ஒருவரையும் மணாளனாக வரிக்கவில்லை. சொல்லவேண்டுமா? தாசி மகள் என்றாலே ஒருவித அலட்சியம்: தவறான அபிப்பிராயம். அத்துடன், அவள் கன்னிப் பெண்ணாகவே காலம் கழித்து வருகிறாள் என்பதை அவர்கள் நம்பவில்லை. ஊர் வம்பு அளப்பதற்காகவே நா படைத்திருப்பதாக எண்ணங்கொண்ட வம்பர்கள் சிலர் நாலாவிதமாகப் பேசலாயினர்.

"ஹம்ஸாநந்தியின் பாட்டு, நடிப்பு, நடனம் எல்லாம் சரிதான் ஐயா! அதற்காக அவள் ஒழுங்கான வாழ்க்கை நடத்துகிறாள் எனச் சொல்ல முடியுமா? அது எப்படி ஐயா இருக்க இயலும்? அவளுடைய சங்கீதக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி என்றாலே, செல்வச் சீமான்களும், மைனர் வாலிபர்களும் எவ்வளவு பணங் கொடுத்தாயினும் வந்து ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக் கொள்ளுகிறார்களே! அவளது சிநேகத்தைப்பெற அவர்கள் என்னென்ன உபாயங்களெல்லாம் செய்கிறார்கள்? பொன்னைக் கொண்டு வந்து குவித்தால் எந்தப் பெண்தான் மயங்கமாட்டாள்? இவள் மணிமேகலையா என்ன? எதற்கும் மனம் துலங்காமல்—நெறி தவறாமல் உறுதியாய் இருப்பதற்கு."

"நீங்கள் சொல்வது வாஸ்தவம்தான். ஒரு யௌவனப் பெண்—அதிலும் தாசிப் பெண்—இவ்விதம் கன்னிப் பெண்ணாய்க் காலங் கழிப்பது கஷ்டம்தான். அப்படி இருப்பதாகச் சொன்னாலும் அதை யாரும் நம்பமுடியாது."

"அதெல்லாம் வெறும் பித்தல், சார் என்ன? இவளை யாரோ குமாரபுரம் ஜமீன்தார் என்பவர் வைப்பாக வைத்துக் கொண்டிருக்கிறாராம். அவருக்குத் தெரியாமல் இன்னும் எத்தனையோ பணக்காரர்களாம். அத்துடன். சினிமா டைரக்டர்கள், பட முதலாளிகள் சிலருடைய சம்பந்தமுமுண்டு என்று சொல்கிறார்கள். படங்களில் நடிக்கின்றாளோ, இல்லையோ! சங்கீத, நடன வட்டாரங்களிலாயினும் ஒருவிதமாக ஒழுங்காக இருந்து தப்பி விடலாம். சினிமாவுக்குப் போனவர்கள் யார் சார், சீர்கெடாமலிருக்கிறார்கள்! கலை, கலாசேவை என்று சொல்லிக் கொண்டு செல்லும் குடும்பப் பெண்களின் பாடே திங்கினதோம் போகிறதே! இந்தத் தாசி மகள் எப்படி ஐயா, ஆடவரைத் தீண்டா ஆரணங்காயிருக்கமுடியும்?"

"இன்னொன்று தெரியுமோ! அந்தக் குட்டியுடன் ஒரு வாலிபன் திரிந்துகொண்டிருக்கிறானே, பார்த்திருக்கிறீர்களா? அவன்தான் அவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறானாம். அதற்காக, அவன் தவமாய் தவமிருக்கிறானாம். அந்தப் பஞ்சைப் பயலை அவள் விவாகஞ் செய்துகொள்ளுவாள் என்று எண்ணுகிறீர்கள்? அவள் இருக்கிற 'மெக்கு' எங்கே? அவன் எங்கே? அவள் அந்த இளைஞனைத் தனக்குத் துணையாக—உதவியாளாக வைத்துக்கொண்டிருக்கலாம். வேறொன்றுங்கூடச் சொல்லுகிறார்கள்: அந்தப் பயல் அவளுக்கு 'மாமா வேலை' பார்க்கிறவனென்று. நானும் அப்படித்தான் இருக்குமென்று நினைக்கிறேன்."

இவ்விதமெல்லாம் ஊரார் நாக்கிலே நரம்பில்லாமல் ஹம்ஸாநந்தியைக் குறித்துப் பேசி வரலாயினர். உண்மை

யில் ஜனங்கள் பேசி வருவதற்கு நேர்மாறான தன்மை கொண்டது ஹம்ஸாவின் அந்தரங்க வாழ்க்கை. அவளுடைய வெளித்தோற்றத்துக்கு (அதாவது சங்கீத சபை, நடனரங்கம், சினிமா ஸ்டுடியோக்களில் அவள் காட்சி யளிக்கும் நடை யுடை பாவனைகளுக்கு) முற்றும் மாறுபட்டது அவளது தனி வாழ்க்கை. அவளது வாழ்க்கை அப்பழுக்கற்றது. அவளது உள்ளம் களங்கமற்றது, தூய்மையானது. மிக இளமையிலேயே லலித கலைகளில் தோய்ந்துபோயிருந்த அவளது மனத்தில் வேறு எதற்கும் இடங் கிடையாது. லலித கலைதான் அவள் உயிர்; உடல்; வாழ்க்கையெல்லாம். கலையே அவளது லட்சியம். கலையே அவளுடைய காதல். கலையே அவள் தெய்வம். அவள் விடும் மூச்சு, பேச்சு எல்லாம் கலைதான். ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், அவள் கலா தேவியைச் சதா வழிபட்டு வந்தாள். அதைச் சங்கீதம் பாடுவது வாயிலாகவும், நாட்டியம் ஆடுவது வாயிலாகவும், படங்களில் நடிப்பது வாயிலாகவும் செய்து வந்தாள் என்றால் உயர்வு நவிற்சியாகாது. கலை வாயிலாகவே, கடவுளைக்கூட அவள் வழிபட்டு வந்தாள். அவள் பாடும் பாட்டு, ஆடும் நடனம் எல்லாம் இறைவனைப்பற்றிய பக்தி பரமாகவே இருக்கும். முருகன் திருப்பெயரைச் சொன்னால் அவள் உள்ளமுருகிப் போவாள். சங்கீதம், நடனம், சினிமா வாயிலாகத் தொழில் முறையில் அவளுக்குப் பணம் வந்து குவிந்துகொண்டிருந்தாலும், அவள் தன் கையால் காசைத் தொடுவதில்லை.

ஹம்ஸாநந்தியைத் திருமணஞ்செய்துகொள்ள இளைஞனொருவன் முன் வந்திருக்கிறான் என்ற பிரஸ்தாபம் மட்டும் உண்மையானதாகும். சிவகுமாரன் என்ற பெயரு

டைய அவன் ஹம்ஸாவுடன் எப்படி நட்பு கொண்டான் என்பது விளங்காத புதிராக இருந்தது. 'வட நாட்டில் பரத நாட்டியமாட ஹம்ஸா சென்றபோது அவன் சிநேகமானான்' என்று ஒரு சிலர் கூறினர். 'இல்லையில்லை; சினிமாவில் சேருகையில் அவன் தொடர்பு அவளுக்கு ஏற்பட்டது' என்றனர் மற்றுஞ் சிலர். வேறு சிலர், 'பர்மா, சிலோன், மலேயா முதலிய இடங்களில் சங்கீதக் கச்சேரி செய்யச் சென்றபொழுது, எங்கோ ஓரிடத்தில் அவன் இவளைச் சந்தித்து பரிச்சயமாகி ஒட்டிக்கொண்டுவிட்டான்' என்று சொல்லினர். எப்படியோ அவன் அவளுடன் வாழ்ந்து வந்தான். அவள் சென்றவிடங்களுக்கெல்லாம் உருவத்தை விட்டுப் பிரியா நிழலைப்போல அவன் சென்று வரலானான். அவன் பரந்த கல்வியறிவும் உலகானுபவமும் வாய்ந்திருந்ததால், லௌகிக முறையில் ஹம்ஸாநந்தி சங்கீத, நாட்டியக் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்வது, சினிமாக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்வது முதலிய காரியங்களைக் கவனித்துக்கொள்வதற்குரிய நம்பிக்கை வாய்ந்த காரியஸ்தனாக அவன் இருந்து வந்தாலேயே, அவனைத் தன்னுடன் துணையாக வைத்திருந்தாள் என்று தெரிந்தது. ஆனால், அவன்மட்டும் தானே ஹம்ஸாவைக் கலியாணஞ் செய்துகொள்ளப்போவதாகச் சொல்லி வந்தான். அவன் பலவகையாகவும் அவள்பால் செல்வாக்குப் பெற்றுவிட்டதால், அவளை அடிக்கடி வற்புறுத்தியும் வரலானான் என்று தெரிந்தது. சிவகுமாரன் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவனென்று தெரிந்ததே யொழிய, அவனிடம் பணமொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜனங்கள் ஹம்ஸாவைப்பற்றிப் பேசுவது போல் அவனது இயற்கை யிருந்தால், செல்வமில்லாத

அவ்விளைஞனைச் சமீபத்தில் சேர்த்தே இருக்கமாட்டாள். ஆகவே, அவன் படிப்பிலும், குணத்திலும், தோற்றத்திலும் ஏதோ கவர்ச்சி கொண்டுதான் அவனைத் தன்னுடன் வாழுமாறு செய்திருக்கிறாள் என்று நான் ஊகிக்கலானேன்.

நான் ஹம்ஸாவைப் பற்றி அறிவதற்குமுன் அவளுடன் பழகிக் குணஞ் செயல்களை அறிவதற்குமுன், நானும் மற்ற மக்களைப் போலத்தான் தவறான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். அவ்வித எண்ணத்தோடேயே நான் அவளுடன் தாராளமாக உறவு கொண்டாடச் சென்றேன். நான் ஒரு கலைப்பித்தன். கலை, கலை என்று கனவுலகில் சஞ்சரிப்பவன். சங்கீதம், நாட்டியம் என்றால் எனக்கு உயிர். மேனாட்டு அறிஞர்கள் கண்டுபிடித்த நவீனக் கலைகளில் ஒன்றான சினிமா பொழுதுபோக்குக்கு உகந்தது பட்டுமல்ல; ஜன சமூகத்தை அறிவு நிலையில் உயர்த்துவதற்கும் உதவியாயிருக்கும் என்பது என் நம்பிக்கை. ஆகவே, அக்கலையிலும் எனக்கு ஆர்வமுண்டு. மேற்குறித்த கலைகளில் தேர்ந்த கலைவாணர்களை—மேற்படி கலைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடுபவர்களைக் கண்டால் அவர்களுடன் அளவளாவ வேண்டுமென்று ஆசை அதிகம். அவர்களிடம் அமைந்துள்ள குண இயல்பு, விசேஷ மனுஷ்யத் தன்மையை ஆராய்ந்து அறிய ஆவல் கொள்வதுண்டு. அம்முறையிலேயே நான் ஹம்ஸாவைச் சந்தித்து அளவளாவச் சென்றேன். நீண்ட காலமாக, நான் அவளுடைய சங்கீதக் கச்சேரிகளைக் கேட்டு வந்திருக்கிறேன்; நாட்டியக் கச்சேரிகளைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அவளது கந்தருவ கானத்திலும், நடன லாவண்யத்திலும் உள்ளத்தை முற்றும் பறி கொடுத்த கலா ரஸிகர் கோஷ்

டியில் நானும் ஒருவன் என்றால், அது மிகையாகாது. ஆனால், அவன் சினிமாவில் நடிக்கத்தொடங்கிய பின்னர் எனக்குக் கவர்ச்சி அதிகமாயிற்று. பெரும்பாலும் தமிழ் லாவகத்திலின் மதிவதனத்தை—உடலழகைக் கண்டுதான் அநேகர் மோகம் கொண்டு வாடுகின்றனர். எனக்கோ அவனது உடலழகைக் காட்டிலும் கலை யழகு தான் கருத்தை பொருந்தக் கவர்ந்தது. நான் அவனது கலை யழகுக்கு அடிமையானேன் என்றே சொல்லலாம். ஆகவே, நான் அவனை எப்படியும் பார்த்துப் பேசி அளவளாவாமல் இருக்க முடியாது என்ற நிலையை அடைந்தேன். எனவே நான், இயற்கையாகவே பெண்மணிகளுடன் பேசிப் பழகுவதில் கூச்சமுடைய நான் துணிந்து ஹம்ஸாவைச் சந்தித்துப் பேசுவதற்கான முயற்சிகளை யெல்லாம் செய்ய லானேன். சிவகுமாரன் அவ்வகையில் எனக்குப் புரிந்த உதவியை நான் மறக்க முடியாது.

2

மக்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கும் பொங்கல் திருநாளுக்கு முன்னாள்; அதாவது தனுர்மாதத்தின் கடைசி நாளான போகிப் பண்டிகையன்று எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. ஹம்ஸா தன்னை மிகவும் மரி யாதையோடு வரவேற்றாள். மனமுவந்து உபசரித்தாள். அன்புடன் பேசினாள். நான் முதலில் பொதுவாக லலித கலைகளைப்பற்றிப் பேச்சைத் தொடங்கினேன். நான் மேற் படி கலைகளின் நுணுக்கங்களைக் குறித்து, கேட்ட கேள்வி களுக் கெல்லாம் அவள் தகுந்த பதிலளித்தாள். அத் துடன், அவள் தான் அக்கலைகளைக் கற்க ஆரம்பித்துக் கொண்ட சிரமத்தையும் அச் சமயங்களில் தனக்கு

ஏற்பட்ட அநுபவங்களையும் கூறினாள். நம் நாட்டியர்வின் சின்னமாக விளங்கிப் பெருமை யளித்துவரும் லளித கலைகளின் கலை மணத்தை எங்கும் பரிமளிக்கச் செய்வதே தனது வாழ்க்கையின் குறிக்கோள் என்று அவள் கடைசியாகக் குறிப்பிட்டாள். எனது முதற் தோற்றமே அவளுக்கு ஒருவிதத் திருப்தியை யளித்ததாகத் தெரிந்தது. அவள் யாருடனும் தனிப்பட்ட முறையில் அதிகமாகப் பேசுவதில்லை என்று அறிந்திருக்கிறேன். அந் நிலையில் என்னுடன் நீண்ட நேரம் பேசினாளென்றால், அது குறிப்பிடத் தக்கதன்றோ? நாங்கள் ஒருவரோடொருவர் உரையாடத் தொடங்கிய ஒரு சில விநாடிகளுக்குள்ளேயே நீண்டகாலம் பழகிய ஆத்ம நண்பர்கள் போலானோம். அவ்வளவுதூரம் எங்களுக்குள் அணுக்கம் ஏற்பட்டது. அவள் என்னுடன் எல்லா விஷயங்களையும் குறித்து மனங் கலந்து பேசினாள். இடையிடையே, நான் சில ராகங்களின் லட்சணங்களைப் பற்றியும், சுரங்களைப்பற்றியும் கேட்டுச் சில பாடல்களைப் பாடும்படியும், சில பதங்களுக்கு அபிநயம் பிடித்துக் காட்டும்படியும், சங்கராபரணம், பைரவி, தோடி போன்ற கன ராகங்களை வீணையில் வாசித்துக் காட்டும்படியும் எல்லாம் கேட்டுக்கொண்டேன். அவள் நான் கேட்டபடி யெல்லாம் ராகங்களையும், பாடல்களையும் பாடியும், பதங்களுக்கு அபிநயம் பிடித்தும், வீணையை வாசித்தும் காண்பித்தாள். ஏற்கனவே அவளது கலா சௌந்தரியத்தில் சொக்கிப்போயிருந்த நான் இப்போது அடியோடு என்னை மறந்தேன்.

வீட்டு நிலா முற்றத்தில் ரத்தின கம்பளத்தின் மீது நாங்கள் கலா சல்லாபம் செய்துகொண்டிருந்தோம். வான வீதியில் தாரகைகள் புடை சூழ சந்திரன் சோடச கலை

சோதி பவனி வந்துகொண்டிருந்தான். அவன் இடையிடையே மேகங்களினூடே மறைந்து செல்வதைப் பார்த்தால், ஹம்ஸாநந்தியின் வனப்பு வாய்ந்த மதிவதனத்தின் முன் தன் முகத்தைக் காட்ட வெட்கமடைகிறான் போலும் என்று எனக்குத் தோன்றியது. கூதிர்காலத்துக் கடைசி தினத்தில் முன்பனி அதிகமாயிருந்தும், கலாரஸனையில் கட்டுப்பட்டிருந்த எங்களுக்கு அது உறைக்கவில்லை.

ஹம்ஸாவுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. திடீரென என்னை நோக்கி அவள் ஒரு கேள்வி கேட்கலானாள்: "அன்பரே! நீங்கள் என்னை நாடி வந்ததன் முக்கிய நோக்கத்தைத் தெரிவிக்கவில்லையே? அதை நான் முதலில் கேட்காமல் இவ்வளவு நேரம் என்னென்னவோ பேசிக்கொண்டிருந்து விட்டேனே?........" என்றாள்.

நான், "ஒரு நோக்கமுமில்லை. சும்மா உன்னைக் கண்டு பேசி யளவளாவி விட்டுச் செல்லவே வந்தேன்...." என்றேன்.

"உண்மையாகவா? வெறுமனே என்னுடன் பேசி விட்டுச் செல்லத்தானா வந்தீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் ஹம்ஸாநந்தி.

"ஆமாம்; அதில் என்ன சந்தேகம்? வியப்பாக வினவுகிறாயே?"

"அப்படியானால், நீங்கள் ஒரு விசித்திரமான மனிதர் தான். உங்களைப்போன்ற மனிதரை நான் இதுவரை பார்த்ததே இல்லை. நீங்கள் என்னுடன் பேச்செடுத்த தோரணையே ஒருவிதமாகத்தான் இருந்தது. கலையைப் பற்றி நீங்கள் பேசத்தொடங்கியபோதே எனக்கு அதிசயமாய்த்தான் இருந்தது. ஆடவரிலும் உங்களைப்போன்ற

மனிதர்கள் இருக்கிறார்களா என்று எனக்கு ஆச்சரிய மேற்படுகிறது.''

"என்ன? இப்படியெல்லாம் பேசுகிறாய், ஹம்ஸா? ஆண்களைப்பற்றி நீ என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய்? அவர்கள் உன் கண்ணுக்கு மனிதர்களாய்த் தோன்றவில்லையா?''

ஹம்ஸாநந்தியின் அழகிய முகத்தில் மின்வெட்டு போல் கோபம் தோன்றியது. "மனிதர்களாகவா? மனிதர்களா யிருந்தால்தான் நல்லதாயிற்றே! மிருகங்களினும் கேவலமாக வல்லவா அவர்களுடைய குணம், போக்கு எல்லாம் இருக்கின்றன? உருவம்தான் மனித உருவே யொழிய, சுபாவம், செயல் எல்லாம் காட்டுமிராண்டித் தனத்திலும் மோசமா யிருக்கின்றன. காமப்பிண்டங்கள்; வெறியர்கள். நீங்கள் ஆயாசப்படக்கூடாது. நான் இவ்விதம் சொல்வதற்கு என்னை மன்னிக்கவேண்டும். நான் என் அறிவு தெரிந்த நாள் முதல் கண்டுவரும் ஆடவர் கூட்டம் இந் நிலையில்தான் இருந்து வருகிறது......''

நான் வியப்பினாலும், விதிர்ப்பினாலும் வாய் அடைத்துப்போய் உட்கார்ந்திருந்தேன்.

ஹம்ஸாநந்தி மீண்டும் பேசத் தொடங்கினாள். "அன்பரே! நான் இவ்விதம் கூறுவது உங்களுக்கு ஒரு வேளை விபரீதமாகத் தோன்றலாம். நான் கண்ட அநுபவம் இது. அதையே கூறுகிறேன். நான் கலையுலகில் ஈடுபட்டு ஏறக்குறைய பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன. இது வரை எனது கலாவல்லபத்தை அல்லது கலா சேவையைப் பாராட்டி ஓர் ஆடவனாயினும் ஒரு வார்த்தை சொல்லிய தில்லை. சொல்லி நான் கேட்டதில்லை. நான் சங்கீதக்

கச்சேரி செய்தது மிக இனிமையா யிருந்தது என்பார்கள்; நாட்டியம் மயர்க்கமானது என்று மொழிவார்கள். நடிப்பு அபாரம் என்று கூறுவார்கள். இப் பசப்பு மொழியெல்லாம் எதற்குத் தெரியுமா? என்னுடன் அறிமுகஞ் செய்துகொள்ளுவதற்குத்தான். அவர்கள் பேச்செல்லாம் எதில் போய் முடியுமென்றால், எனது அழகைக் கண்டு அப்படியே சொக்கிப்போய்விட்டதாகவும், என்னைக் கண்ட மாத்திரத்திலேயே காதல் உண்டாய்விட்டதாகவும், அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி என் நினைவாகவே இருப்பதாகவும், ஆகவே, தங்கள் உயிர் நிலைக்கவேண்டுமானால், தங்கள் காதலை பெற்றுக்கொள்ள வேண்டுமென்னும் எல்லாம் பிதற்றும் காமப்பிதற்றலேதான். இப்படியெல்லாம் பசப்பி என்னை மயக்கி அவர்கள் பணத்தைக் வாரி யிறைத்து விலைக்கு வாங்கிவிடலாம் என்று வருவதேயொழிய, வேறெவ்வித நோக்கத்தோடும் என்னை அணுகுவதில்லை. என்னுடைய இனிய கானம், லாவண்ய நடனம், உன்னத நடிப்பு இவற்றில் எல்லாம் அவர்கள் உள்ளம் படிவதேயில்லை. கலையழகு அவர்கள் கருத்தைக் கவர்ந்ததே கிடையா! கேவலம் இப் பாழுந் தேகத்தில் தோலழகில்தான் அவர்களுடைய கண்கள் தோய்ந்திருக்கும். மாமிசத்தைப் பிடுங்கித் தின்னக் கூடும் நாய், நரி, கழுகுக் கூட்டங்களைப்போல்தான், தங்கள் சுக புணர்ச்சியைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் எனது இப் பாழ்த்த உடலை வெறித்துப் பார்ப்பார்கள். நீங்கள் பேசிய இவ்வளவு நேரத்தில் வேறு ஆடவரா யிருந்தால், எவ்வளவு காதல் சல்லாபங்கள், எவ்வளவு காம சேஷ்டைகள் நடந்திருக்கும் தெரியுமோ! அடாடா! இந்நிலை கெட்ட ஆடவரை நினைத்துவிட்டாலே நெஞ்சந் துடிக்கிறது; கொதிக்கிறது.

ஆண்கள் கூட்டம் என் போன்ற பெண்களிடம் நடந்து கொள்ளும் அநாகரிகச் செயலை-அக்கிரமத்தைப்பார்த்தால், அது அளவிட்டுச் சொல்லமுடியாது. நான் இந்த உலகில் ஆடவர் கூட்டத்தைக் காணவில்லை; காமப் பேய்களையே காண்கிறேன். காமாந்தகாரத்தில் மூழ்கித் தவிக்கும் முழு மூடர்களையே பார்க்கிறேன். இவ்வளவு! காமவெறி கொண்டு அலைகிறார்களே! அப்படியாயினும் இவர்கள் காம இன்பத்தைச் சரியாக நுகர முடிகிறதா? அவ்வகையில் அவர்களில் பலர் கையாலாகாதவர்கள் என்றே சொல்லவேண்டும். அதில் இவர்களுக்குப் பொறுமையோ சக்தியோ கிடையாது. என்னைக் கேட்டால் ஆணுலகமே அலிகள் கூட்டம் என்பேன். தங்கள் செல்வத் திமிரால் என் சரீரத்தை விலைப்படுத்திச் சிதைத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கோடு வந்தவர் பெரும்பாலார். ஆனால், ஒருவராயினும் தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லாமல் தோற்றுச் சென்றனர். வியத்தமாகப் பேசுகிறேன். விரஸமாயிருந்தாலும் பரவாயில்லை. என்னிடம் தங்கள் காம இச்சையைத் தீர்த்துக் கொண்டு செல்ல வந்தவர்களில் சிலர் என் முறுவலைக் கண்டு திருப்தியுற்றுத் திரும்பினர். மற்றும் சிலர் என் கொஞ்சு மொழியைக் கேட்டுக் குளிர்ந்து சென்றனர். வேறு சிலர் என் உடைய கடைக்கண் நோக்கை ஏற்றுக் கார் ஏறிப் போயினர். இன்னும் சிலர் என்னைக் கண்ட தற்கு அடையாளமாக, என்னிடமிருந்த அற்பப் பொருள்களையும் பெரிதாக மதித்து கெஞ்சிக் கேட்டு வாங்கிச் சென்றனர். காற்றில் பறக்கும் என் ஆடைத் தலைப்பை யெடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு ஆனந்தங் கொண்டவர் பலர். என் பாதஸ்பரிசம் பட்டால் அதுவே ஜன்ம

சாபல்யமாகும் என்று கருதித் 'திருவடி தீட்சை' பெற்றுச் சென்றவர் அநந்தம். 'திருநோக்கால், பரிசத்தாக், திகழும் வாக்கால்' சமய தீட்சை பெற்று ஜன்ம விமோசன மடைய விரும்பும் பரம பக்தர்களைப்போல, என் போன்ற பெண்மணிகளின் கடைக்கண்ணோக்கு, சரசப் பேச்சு, கேவலம் ஸ்பரிசம் மாத்திரத்தாலேயே அவசமாகும் அவல ஆடவர் கூட்டத்தைப் பேடிகள் கூட்டம் என்னாது வேறு என்னென்பது! மங்கைப் பருவம் அடைந்த எனது இந்த எழெட்டு வருட அநுபவத்தில், நான் இத்தகைய ஆண்களையே சந்தித்திருக்கிறேன். நானும் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, இப் பரதகண்ட முழுதும், ஏன்? தமிழ் வழங்கும் வெளி நாடுகளிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து பல திறப்பட்ட ஆடவர்களைப் பார்த்தும் பேசியும் இருக்கிறேன். இதுவரை ஒருவராயினும், என் உள்ளத்தை அல்ல; உடம்பைக்கூடத் தொடத் தகுதியுடையவர்களாக எனக்குத் தோன்றவில்லை. எப்பேர்ப்பட்ட அழகிய ஆண் மகனைக் கண்டும் என் உள்ளக் கமலம் திறந்து இடந் தரவில்லை. என் நெஞ்சத் தாமரை இன்னும் மொட்டாகவே தான் இருந்துவருகிறது. என் அழகைக் கண்டு மோகித்த ஆடவர்கள் எவரும் என்னுடைய உள்ளத்தைக் கவர முயலவில்லை; என் உடலைத்தான் கவரப் பெரு முயற்சி செய்தார்கள். தடாகத்தில் முகிழ்த்திருக்கும் தாமரை மொட்டைச் சுற்றிச் சுற்றி ரீங்காரஞ் செய்கின்றன கருவண்டுகள், அம் மலரினுள் இருக்கும் தேனைப் பருகுவதற்கு. ஆனால், அவ் வண்டுகளால் அத் தாமரையை மலர வைக்க முடியவில்லை. புல்லிதழ்களைத்தான் பிரிக்க முடிகிறது. செந்தாமரைச் செல்வியின் காதலனை சூரியன் உதயமாய் வந்தால்தானே அம் மலர் மலர்ந்து

மணம் வீசித் தேன் துளிக்கும்? அதுபோல, என் உள்ளக் கமலத்தை மலர வைக்கப் பிறந்திருக்கும் ஆடவனை யன்றி, இக் காமப் பைசாசங்களால் இயலுமா?" என்று உணர்ச்சி பொங்கி கேட்டாள்.

அவளது இப் பேச்சைக் கேட்டு எனக்குண்டான வியப்புச் சொல்லி முடியாது. பலதிறப்பட்ட ஆடவ ரிடையே நடமாடும் நிலையிலுள்ள ஹம்ஸாநந்தி இன்னும் கன்னிப் பெண்ணாகவே இருப்பதையறிந்து நான் இறும்பூது எய்தினேன். 'அப்படியானால், இதுவரை ஊர் ஜனங்கள் பேசி வந்த பேச்சனைத்தும் பொய்தானா?' என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். கடைசியாக, என் மனதில் தோன்றிய ஐயத்தைப் போக்கிக்கொள்ளவேண்டி, "நான் ஒரு விஷயத்தை மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உன்னுடன் இருந்து வருகி றானே சிவகுமாரன்: அவன் எந்த நிலையில் உன்னோடு உறவாடி வருகிறான் என்பதை நான் அறிந்து கொள்ள லாமா? அவன் உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளப் போவதாகப் பேச்சு இருந்து வருகிறதே! அது உண் மையா?......" என்று கேட்டேன்.

ஹம்ஸாநந்தி கலகலவென நகைத்து, "இவ்விதப் பேச்சு இருந்து வருவது எனக்கும் தெரியும். ஆனால், அது உண்மையல்ல. பாவம்! சிவகுமாரன் எனக்காக-என் நலனுக்காக-உயர்வுக்காகப் பல வகையிலும் மிகவும் பாடுபட்டு வருகிறான். ஆகவே, அதற்குப் பதிலாக அவன் என் ஆதரவை நிரந்தர மாக்கிக்கொள்ள முயல்வது நியாயமே! ஆனால் என் உள்ளம் அதை ஏற்கவேண்டு மல்லவா! அவ்வகையில் அது கல் பலகையாக இருந்து

வருகிறது. நான் என்ன செய்யட்டும்? அப்படியானால், சிவகுமாரன் இவ்விதம் புகார் பண்ணி வருவதற்கு நான் ஏன் இடங் கொடுக்கிறேன் என்று நீங்கள் கேட்கலாம். இது ஒருவகையில் எனக்கு அநுகூலமாக இருக்கிறது. நான் ஒருவனை விவாகஞ் செய்துகொள்ளப் போகிறேன் என்று அறிந்ததுமே, என்னை மோப்பம் பிடித்துத் திரியும் காம வெறி கொண்ட நாய்க்கூட்டம் என்னை அணுகச் சிறிது யோசிக்கும். சிவகுமாரன் என்னுடன் இருந்துவரும் காலத்திலிருந்தே, மைனர் கூட்டத்தின் வீண் தொந்திரவு சிறிது அடங்கி யிருக்கிறது. சிவகுமாரனை எனக்குத் துணையாக வைத்திருப்பதற்கு அடிப்படையான காரணம் இதைத் தவிர வேறில்லை. அவன் எனக்குக் காவலனே யொழிய, கணவனில்லை என்பதை இப்போதாவது நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்" என்று கூறி நிறுத்தினாள்.

நான் மௌனமாக அவள் கூறுவதைக் கேட்டு வந்தேன். ஹம்ஸாநந்தி ஏதோ நினைத்துக்கொண்டவள் போல், "நம் சமுதாயத்தில் ஆண்களுக்கு உள்ளதைப் போல் பெண்களுக்கு உரிமை இல்லாமற் போனதற்குக் காரணமென்ன? ஆண்கள் விருப்பப்பட்டால் ஏகாங்கமாக வாழலாம். எவருடனும் பழகலாம். நட்பு கொள்ளலாம். கால முழுதும் பிரமசாரியாகவே காலங் கழிக்கலாம்: இஷ்டப்பட்டால் எந்த வயதிலும் யாரையும் காதலிக்கலாம்: கலியாணஞ் செய்து கொள்ளலாம். அவர்கள் இஷ்டத்துக்கு மாறாகப் பலவந்தப்படுத்தவோ, தொந்திரவு கொடுக்கவோ ஜனசமூகத்துக்கு உரிமையில்லை; அதிகாரங் கிடையாது. அதுபோல, பெண்களுக்கு ஏன் வசதியில்லை? உரிமையில்லை? நான் கன்னிப் பெண்ணாக வாழ விரும்பி

கிறேனென்றால், அதைக் கெடுக்க இந்த ஆடவர் கூட்டம் ஏன் முனையவேண்டும்? நான் ஏகாந்தமாக இருக்க ஆசைப் படுகிறேனென்றால், அதற்கு இடையூறு விளைவிக்க ஏன் முயலவேண்டும்? நான் எனக்குத் துணையாக ஒருவனை வைத்திருக்கிறேனென்றால், அதற்கு இத்தனை புரளி ஏன்? என்னைப்பற்றி அவதூறாக வெல்லாம் பேசுவானேன்? பெண்ணென்றால்—அதிலும் தாசிப் பெண்ணென்றால்—எது வேண்டுமானாலும் பேசலாம் போலும்! நான் தாசி மகளாய்ப் பிறந்தால்தான் என்ன? அந்த ஒரு பிரிவுக்கு ஒரு குறைமா? நான் தாசி குலத்தில் பிறந்ததனாலேயே விபசாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும், பல ஆடவர்களுடனும் கூடிக் களிக்க வேண்டுமென்றும் விதியிருக்கிறதா? சட்டம் இருக்கிறதா? நான் தாசிப் பெண்ணாய்ப் பிறந்தது என் குற்றமா? அப்படிக் குற்றமானால், அந்தக் குற்றத்தை என்னை அவ்விதம் பிறக்க வைத்த ஆண்டவன் மீது சுமத்தட்டும். தாசிப் பெண்ணென்றால் அவளுக்கு உள்ளமில்லையா? உணர்ச்சியில்லையா? உரிமையில்லையா? மதியில்லையா? மானமில்லையா?" என்று ஆவேசத்தோடு அடுக்கிக்கொண்டே போனாள்.

நான் பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டேன்.

ஹேமலதாவின் சாந்தியடைவதற்குச் சிறிது நேரமாயிற்று. பின்னர் அவள், "ஐயா, நான் உணர்ச்சி மேலிட்டால் உங்கள் முன்னிலையில் என்னென்னவோ உளறிவிட்டேன். நான் தாசிப்பெண்ணாய்ப் பிறந்து இந்த ஆணவங்கொண்ட ஆடவர்களிடம் பட்ட கஷ்டமும், தொல்லையுமே இவ்விதமெல்லாம் என்னைப் பேச வைத்தது. ஆகவே, நீங்கள் அதைப் பொருட்படுத்த மாட்டீர்களென்று நம்புகிறேன்" என்று கூறினாள்.

"கடைசியாக, ஒரு சந்தேகம்" என்று நான் மெல்ல ஆரம்பித்து, "ஹம்ஸாநந்தி, கலாதேவியை உபாசனை செய்து வரும் நீ இசை, நடனங்களில் ஈடுபட்டுக் கச்சேரி செய்து வருவது சரி; ஆனால், சீர்கெட்ட சினிமா உலகில் —நினைத்தாலே நெஞ்சம் நடுங்கும் இந்தச் சினிமா உலகில் —நீ பிரவேசித்து படங்களில் நடிக்க எப்படி முற்பட்டாய்? உன் இயற்கைக்கே ஒரு சிறிதும் பொருந்தாத சினிமாத் தொழிலை நீ மேற்கொண்ட காரணமென்ன? படங்களில் நடித்துத்தான் நீ பெரும் பிரசித்தியும் பெறவேண்டுமென்றோ, கலையை வளர்க்கவேண்டுமென்றோ ஏதாயினும் இருக்கிறதா? உண்மையில் உனக்கு அவ்வித எண்ணமுண்டா?" என்று கேட்டான்.

ஹம்ஸாநந்தி முல்லை மலர் போன்ற பல் வரிசையை மெல்ல வெளிப்படுத்தியவாறு, "அதுவா! அது ஒரு பெரிய கதையாயிற்றே!" என்று தொடங்கி, தான் சினிமாவுலகில் புக நேர்ந்ததன் அவசியத்தையும் நிர்ப்பந்தத்தையும் விரிவாகக் கூறும் முறையில் தன் பிறப்பு வளர்ப்பையும் பெற்றோர் உற்றார் பற்றிய குடும்ப வரலாற்றையும் சாங்கோபாங்கமாக எனக்கு விவரித்தாள்.

3

உருத்திர கணிகையர் குலம் அல்லது தேவ தாசிகள் குலம் என்பது தமிழ் நாட்டில் தாய்க் குலத்தில் எப்படியோ எக்காலத்திலோ ஏற்பட்டுவிட்ட ஒரு பிரிவாகும். கடவுள் பெயரால், அவனது திருப்பணிக்காக இப் பிரிவு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பௌத்த சமயத்தில், மதப் பிரசாரத்துக்காக, சமய சேவைக்காக, பெண்மணி-

களைச் சந்நியாச விரதம் பூண வைக்கும் வழக்கம் உண்டா யிற்று. இதைக் கண்டு நமது சமயத்தவர்களும் இறைவன் பணிக்கென இள மகளிரை அமர்த்தி யிருக்க வேண்டும். ஆகவே, பின்னர், தேவதாசிகள் வகுப்பாக மாறி யிருக் கிறது என ஊகிக்கவேண்டி யிருக்கிறது.

இப்பொழுதும் உருத்திர கணிகையார் குலத்தில் பிறந்த பெண்களை மங்கைப் பருவம் அடைந்ததும், யாவரும் அறியும்படியாக, ஊர்ப் பொதுக் கோவிலுக்கு அழைத்துச் சென்று, சுவாமிக்கு அபிஷேக அர்ச்சனைகள் செய்வித்து, குருக்களுக்குப் பட்டு பீதாம்பரம் வழங்கி, மேள தாளங் கள் முழங்க, பொன்னால் செய்த சிறு பொட்டை அவர் களின் கழுத்தில் கட்டித் தேவனுக்கு அடியாராக்கி, தெய்வ கைங்கரியத்தில் ஈடுபடுத்துவது ஒரு சம்பிரதாய மாக இருந்து வருகிறது. இவ்விதம், 'பொட்டுக் கட்டல்' என்ற சடங்கால், இறைவனுக்கு உரியவளெனப் பறை சாற்றப்பட்ட பெண்மணிகள் தாங்கள் கற்றுத் தேர்ந்த சங்கீதம், நாட்டியங்களை தேவ சந்நிதி முன் இசைத்துக் காட்டி நடனஞ் செய்து வருவது இன்றைய நடப்பாக இருந்து வருகிறது. தேவதாசி வகுப்பில் பிறந்த மகளிர் இறைவன் திரு முன்னர் இனிய கீதம் பாடி, நடனமாடு வர, ஆடவர் நாதஸ்வர மேளம் வாத்தியங்கள் வாசித்து தேவ கைங்கரியங்களைச் செவ்வையாகச் செய்து வரு கின்றனர்.

இறைவனுக்குத் திருத்தொண்டு செய்யும் வகையில் சங்கீதம், நாட்டியம் முதலிய லலித கலைகளை வளர்த்து வந்த தேவதாசி வகுப்பில் தான், காலக்கொடுமையால் விபசாரக் கூட்டமொன்றும் ஏற்பட்டது. காலதேவனின்

கோர தாண்டவத்தில் சிக்குண்டு, தெய்வத் திருப்பணி என்னும் புனித சேவையினின்றும் விலகி, தகைமை கெட்டுப் பிழைப்புக்காக, விபசாரமென்னும் படுமோசமான தொழிலை மேற்கொண்டது ஒரு சிறு கூட்டம். இக் கூட்டத்தின் வழி வழி வந்தவள்தான் மீனலோசனி—அதாவது ஞானம்மாவின் அன்னை.

மீனலோசனியின் பெற்றோர் மேளக்கார தேவதாசி வகுப்பில் ஒழுங்கான வாழ்க்கையை நடத்தி வந்தவர்கள். பொது மகளாக—விலை மகளாக மீனலோசனி மாறுவதற்கு அவளே முழுப் பொறுப்பாளி; பெற்றோரைப் பெரும் பாக்க முடியாது. மீனலோசனியை மிகவும் பிரியமாகவும் அருமையாகவும் வளர்த்தவள் இவளது சிற்றன்னை. அவள் நெறிகெட்டுப் போனவளாதலால், இவளையும் நெறிகெடச் செய்தாள். அவள் மீனலோசனிக்கு சிறந்த வைணிக ஒருவரை ஆசிரியராக அமர்த்தி வீணை வாசிக்கக் கற்றுக் கொடுத்தாள். இயற்கையிலேயே அழகும் அறிவும் வாய்ந்த மீனலோசனி வெகுவிரைவில் சங்கீத உலகில் ஒரு உன்னத ஸ்தானத்தை யடைந்தாள். மீனலோசனியின் பொழுதும் மீனலோசனங்களும் இனிய சாரீரமும் அருமையான வீணை வாசிப்பும் செல்வச் சீமான்களை யெல்லாம் அவள்பால் ஈர்த்தன; அவளை வட்டமிட வைத்தன.

மீனலோசனியின் உடல் அழகிலும், கலையழகிலும் மனதைப் பறிகொடுத்து அவளுக்கு அடிமையானவர் ஒரு பிராமணச் செல்வர். லட்சாதிபதியான அவர் மிகப் பாடு பட்டு மீனலோசனியைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டார். அவள் நேசத்தைப் பெறுவதற்காக அவர் தம் நில புலன், பொன் பொருள் அனைத்தையும்

அவளுக்கே அர்ப்பணஞ் செய்து விட்டார். அவர் அவளைக் கேவலம் வைப்பாட்டியாக மட்டும் கருதாது, உண்மைக் காதலியாகவே கருதிக் கௌரவமாக நடத்தினர். மீனலோசனியின் மனம்தான், சிற்றன்னையின் 'போதனை'யால் இடையிடையே சளைப்பட்டதுண்டேயொழிய அப்பிராம்மண கனவான் மட்டும் கடைசிவரை அன்பு மாறாமல் நடந்து கொண்டார்.

மேற் குறித்த பிராம்மணச் செல்வரின் அன்பின் சின்னமாக மீனலோசனிக்குப் பிறந்த முதல் பெண்தான் நமது கதாநாயகி ஹம்ஸாநந்தி. இவளுக்குப்பின், மீனலோசனி இரண்டு ஆண்களையும், ஒரு பெண்ணையும் பெற்று மகிழ்ந்தாள்.

காலம் எப்போதும் செல்வக் குதிரையில் சவாரி செய்வதில்லை. அதனுடைய நிலையற்ற சாயை மீனலோசனியின் செல்வ வாழ்க்கையின்மீது படிந்தது. ஹம்ஸாநந்திக்கு ஐந்தாறு வயது நடக்கும்போதே, மீனலோசனியின் குடும்ப போஷகரான பிராம்மண கனவான் திடீரென மரணமடைந்தார்; ஆகவே, மீனலோசனியும், குழந்தைகளும் வறுமைப் படுகுழியில் தூக்கி யெறியப்பட்டனர். குதூகலமாக நடந்துகொண்டிருந்த அவர்கள் குடும்ப வாழ்க்கை, பிராம்மண கனவானின் மறைவினால் நிலை குலையலாயிற்று. இருந்த செல்வமெல்லாம் அவர்களை விட்டுச் சீக்கிரம் விடைபெற்றது. தரித்திரம் தாண்டவமாடியது. உடுக்க உடைக்கும், உண்ண உணவுக்கும்கூட, பஞ்சமேற்பட்டதென்றால் அதிகம் விவரிப்பானேன்!

இவ்வித நெருக்கடியான நிலையில்தான் மீனலோசனிதான் இளமையில் கற்றுத் தேர்ந்திருந்த வீணை வாசிப்பை

தோழியாகக் கொண்டாள். அவளது வைணிக வித்தை வாழ்க்கைக்கு வழி காட்டியது. அவள் தன் தளிர் விரல்களால் வீணையை மீட்டினாள். அதிலிருந்து இனிய கானம் எழுந்தது. எல்லோருடைய உள்ளங்களையும் ஒருங்கே ஈர்த்துப் பரவசப்படுத்தியது. சிறிது காலத்துக்கெல்லாம் மீனலோசனி தனது அபார சங்கீத வித்வத்தால், தமிழ் நாட்டிலேயே ஒப்பற்ற வைணிக வித்வாம்சனி என்ற பெயரைப் பெற்றுவிட்டாள். கலைவாணியின் பரிபூரண அருளைப் பெற்றவள் என வியந்து பாராட்டப்பட்ட அவள், வெகு சீக்கிரத்தில் அதன் வாயிலாகத் திருமகளின் கருணை கடாட்சத்தையும் சம்பூரணமாகப் பெற்று விட்டாள்.

மீனலோசனி பழையபடி, பணக்காரியானது அவ்வளவு பிரமாதமல்ல. அவளது வீணை வாசிப்பு தமிழகத்துக்கு இணையற்ற இசைவாணியொருத்தியை உருவாக்கிக் கொடுத்ததே, அதுதான் விசேஷமானதாகும். மீனலோசனி தான் வீணைக் கச்சேரி செய்யப் போகுமிடங்களிலெல்லாம் தன் மூத்த மகள் ஹம்ஸாநந்தியையும் உடன் அழைத்துச் செல்வாள். சதஸில் அவள் தன் அருமைச் செல்வியை அருகில் வைத்துக்கொண்டு வீணை வாசிப்பாள். அவள் தன் அழகிய விரல்களைக்கொண்டு வீணைத் தந்திகளில் செய்யும் ராக விந்நியாசங்களையும் எழுப்பும் இனிய ஓசைகளையும் கேட்டுக் கேட்டு ஹம்ஸாநந்தியின் உள்ளம் பண்பட்டு வந்தது.

நாலைந்து வயது சிறுமியாக இருக்கும்பொழுதே ஹம்ஸாநந்தி, தன் தாய் வீணை வாசிக்கும் காலத்திலெல்லாம் விளையாட்டை விட்டு ஓடி வந்து அமர்ந்து உன்னிப்பாகக்

கேட்பாள். அன்னையின் கரங்களால் மீட்டப்படும் வீணை வாத்தியத்திலிருந்து எழும் இனிய கானத்துக் கேற்பப் போல், ஹம்ஸாநந்தி தன் குழந்தை நிலையையொட்டித் தொடையில் தாளம் போடுவாள். மீனலோசனியின் வீட்டுக்கு வரும் சங்கீத வித்வான்களும், மற்றுங் கனவான்களும் ஹம்ஸாநந்தியின் நுண்மதியைக் கண்டு வியப்புறுவர். சங்கீத வித்வான்கள் பாடும் பாடல்களையும், இசைத் தட்டுகள் இசைக்கும் இனிய கீதங்களையும் ஹம்ஸாநந்தியின் குழந்தையுள்ளம் கேட்ட மாத்திரத்தில் 'ரிகார்டு' செய்துகொள்ளும் வன்மை வாய்ந்ததாயிருந்தது. கிராமபோனை எடுத்துவைத்து, நல்ல இசைத் தட்டுகளைப் போட்டுவிட்டு அவற்றின் கூடவே அவள் பாடத் தொடங்குவாள்; தாளங்களை இஷ்டம்போல் போட்டுத் தலையசைத்து மகிழ்வாள். எப்போதும் அவளது கொவ்வை இதழ்களில் இனிய கீதம் கொஞ்சிக் கொண்டிருந்தது.

இவ்விதம் தன் மகள் இன்னிசையிலேயே இதயத்தைத் தோய விட்டிருப்பதையறிந்த மீனலோசனி மனமகிழ்ந்து, அவளுக்குச் சங்கீதத்தை முறைப்படி கற்றுக்கொடுத்து வரலாயினாள். முதலில் தானே தன் செல்விக்குக் குருவாயிருந்து இசைப் பயிற்சி செய்து வந்த அவள் பின்னர், பிரபல சங்கீத வித்வான்களைக் கொண்டு கற்பிக்கலாயினாள். நாளடைவில், ஹம்ஸாநந்தி இன்னிசைக் குளத்தில் பூத்த இனிய தாமரை மலரானாள்.

ஹம்ஸாநந்தி தனது இயற்கையான சங்கீதத் திறமையாலும், மீனலோசனியின் சிரத்தையாலும் எட்டாவது வயதிலேயே இசையரங்கில் ஏறிச் சங்கீதக் கச்சேரி செய்யத் தொடங்கிவிட்டாள். 'என்ன ஆச்சரியம்!' என

எல்லோரும் மூக்கின் மீது விரலை வைத்தனர். பால்மணம் மாறாத சிறுமியின் குமுத வாயிலிருந்து ராக ஆலாபனங்களும் அபார சங்கதிகளும் ஸ்வர ஜாதிகளும் வந்து விழுவதைக் கண்டு அனைவரும் வியப்பிலாழ்ந்தனர். அத்துடன் அவள் இளம் கண்டத்திலிருந்து எழுந்த கந்தருவ கானம் எப்பேர்ப்பட்டவர் உள்ளத்தையும் ஈர்த்தது. 'இவள் சாரதையின் அவதாரமோ!' என்று பலரும் அதிசயித்தனர்.

மீனலோசனியை விட, சிறுமி ஹம்ஸாநந்தி வெகு சீக்கிரத்தில் பேரும் புகழும் பெறலானாள். எங்கு பார்த்தாலும் ஹம்ஸாநந்தியின் சங்கீதக் கச்சேரிதான். யார் பார்த்தாலும் தங்கள் வீட்டு விசேஷ வைபவங்களுக்கு ஹம்ஸாநந்தியையே பாட அமர்த்தலாயினர். சங்கீத ரஸிகர்களும், சீமான்களும் ஹம்ஸாநந்திக்குப் பலவிதமான பரிசுகளும், பட்டங்களும் வழங்கலாயினர்.

ஹம்ஸாநந்தி வாய்ப்பாட்டில் பிரசித்தி பெற்று வருகையில், இடையிடையே மீனலோசனி தன் குலத்தொழிலான பரத நாட்டியத்தையும் கற்றுக்கொடுத்து வரலானாள். தேவதாசி பரம்பரையின் சம்பிரதாயம் கெடப்படாது என்பது அவள் நோக்கம் போலும்! அத்துடன், அவள் ஹம்ஸாநந்திக்கு வீணை வாசிக்கவும் கற்றுக்கொடுத்தாள். ஹம்ஸாநந்தி வீணையையும், பரத நாட்டியத்தையும் விருப்புடன் பயின்று வந்தாளாயினும், வாய்ப்பாட்டில் அவளுக்கு இருந்த ஆர்வம் இவற்றில் அவ்வளவு இல்லை. ஆதலால், அவள் வாய்ப்பாட்டில் போல், வீணையிலும் நடனத்திலும் குறிப்பிட்ட ஓரளவுக்குத்தான் நிபுணத்துவம் அடைய முடிந்ததே யொழிய, விசேஷத் திறமையும்

அதன் வாயிலாகப் பிரசித்தியும் பெற்றதாகச் சொல்ல முடியாது ; ஆனாலும், அவ்வித்தைகளும் எதிர்காலத்தில் அவளுக்கு உதவத்தான் செய்தன.

ஹம்ஸாநந்தி இசையுலகில் இணையற்று விளங்கியது போலவே, அழகிலும் ஒப்புயர்வற்று விளங்கினாள். ஆதலால், அவள் மங்கைப்பருவம் எய்துவதற்கு முன்னரே, அவளைத் தங்களுக்கு உரிமையாக்கிக்கொள்ள செல்வக்குமாரர்கள் பலர் முந்தலாயினர். அவர்கள் ஹம்ஸாநந்தியின் அன்பைப் பெறவேண்டி, அவளுக்குக் கனகாபிஷேகம் செய்யவும் தயாரா யிருந்தனர். மீனலோசனிக்குத் தன் வீணைக் கச்சேரி வாயிலாகவும் பெரும்பொருள் குவிந்திருந்தாலும், தன் மகளின் பேரழகுக்குப் பணயங் கூறிப் பல செல்வர்களும் வருவதைப் பயன்படுத்திக் கொள்ளாதிருக்க விரும்பவில்லை. எனவே, அவள் தன் செல்விக்குச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் செல்வர் தயவைப் பெறும் விதத்தைப் பற்றிச் சொல்லிக்கொடுத்து விபசாரத்தில் ஈடுபடுத்துவதற்குத் தூபம் போடலானாள்.

ஆனால், ஹம்ஸாநந்தி தாயின் துர்ப்போதனைக்குச் சிறிதும் இணங்கவில்லை. தான் அவ்விதப் பாபச் செயலை —கேவல வாழ்க்கையை—மேற்கொள்ள முடியாது என்று அவள் தன் தாய்க்குக் கூறிவிட்டாள். மீனலோசனி நயத்தாலும் பயத்தாலும் தன் மகளை விபசாரத்தில் ஈடுபடுத்த, இடைவிடாது முயன்றாள். ஹம்ஸாநந்தி சிறிதும் அசைந்து கொடுக்கவே யில்லை.

"இவள் பரிசுட்டியாயிற்றே! குழந்தையாயிருக்கும் போதே இவளை யாரும் எடுத்து முத்தங் கொஞ்சக்கூட இடங் கொடுக்கமாட்டாளே! அப்பேர்ப்பட்ட தன்மை

வாய்ந்தவள் அறிவு தெரிந்த இந்தப் பருவத்திலா பல பேருடன்—அதிலும் முன் பின் பழகியறியா ஆடவர்களுடன் கொஞ்சிக் குலாவுவாள்? கூடிக் குழைவாள்? இந்தத் 'தீண்டா நெருப்பு' என் வயிற்றில் ஏன் பிறந்தது!'' என வயிற்றெரிச்சலோடு முணுமுணுப்பாள் மீனலோசனி. அவள் என்னவாயினும் வைது கொண்டு போகட்டும் என்று ஹம்ஸாநந்தி லட்சியஞ் செய்யாதிருந்துவிடுவாள்.

ஹம்ஸாநந்தி சேற்றில் முளைத்த செந்தாமரை: ஆதலால், அவள் தாசி குலத்தில் பிறந்தாலும் தாய் வழியில் சென்று விபசாரச் சேற்றில் அழுந்தச் சிறிதும் விரும்பவில்லை. அவள் அக் கேவல வாழ்க்கையை அறவே வெறுத்தாள். ஆகவே, அவள் அதினின்றும் தப்பச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தாள். இதனிடையே, செல்வந்தர் பலர் மீனலோசனியின் உதவியைக் கொண்டு இவளுடன் உறவாட முயல்வர். ஹம்ஸாநந்தி தனது சாமர்த்தியத்தால், அவர்களையெல்லாம் தன்பால் நெருங்க விடாமலே இனிமையாகப் பேசி மழுப்பிவிடுவாள். ஆனாலும், கோகிலம் கொஞ்சும் குரல்வாய்ந்த சோபனாகாரமான ஹம்ஸாநந்தியுடன் பேசுவதையே பெரும்பாக்கியமாகக் கருதினர் பலர். அவ்வகையிலாயினும் தொடர்பேற்படுத்திக்கொள்ள முயன்று சிலர் அவளது தயவைப் பெறுவதற்காக அவளுக்கு உகந்த காரியங்களைப் போட்டி போட்டுக்கொண்டு செய்யலாயினர். அவ்விதம் அன்பைப் பெற முயன்றவர்களில் ஒரு பிரமுகர் செய்த காரியமே ஹம்ஸாநந்தி பாடி வரும் இனிய பாடல்கள் இசைத் தட்டில் வருவதற்கு ஏதுவாயிற்று. இசைத்தட்டுகள் ஹம்ஸாநந்தி ஏற்கனவே பெற்றிருந்த இசைக்கு இன்னும் ஏற்றத்தை யளித்தன. சங்கீத உலகிலிருந்து ஹம்ஸாநந்தியின் கந்தருவ கானத

தைக் கேட்டு மகிழ்ந்த ஒரு பட முதலாளி இவளைத் தாம் எடுக்கப்போகும் ஒரு படத்தில் கதாநாயகியாக நடிக்க வைக்க விரும்பினார். ஆகவே, அவர் ஹம்ஸாநந்திக்குத் தூது விடுத்தார். தாயின் நிர்ப்பந்தத்திலிருந்து எப்படித் தப்புவதென்று மனங் கலங்கிக்கொண்டிருந்த ஹம்ஸா நந்தி இதுதான் தகுந்த சமயமென்று கருதி, 'சினிமாவில் நடிப்பது கேவலம்' என்று அன்னை சொல்லியுங் கேளாது, பட முதலாளி விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு உடனே பெற்ற தாய்க்கும் தெரியாமல் தூது வந்தவர்களுடனேயே புறப்பட்டுவிட்டாள். இதுதான் ஹம்ஸா நந்தி சினிமா உலகில் பிரவேசிக்க நேர்ந்ததற்குரிய காரணமாகும்.

4

"இன்று உன்னைச் சந்தித்ததில் பொதுவாகப் பல விஷயங்களையும், உன்னைப்பற்றிய உண்மையான நிலையையும் அறிந்துகொண்டேன், ஹம்ஸாநந்தி! இவ் வகையில், நான் உனக்குக் கொடுத்த தொல்லைக்காக மன்னி......." என்று நான் அவளிடமிருந்து விடைபெறுவதற்குப் பீடிகையாகப் பேசினேன்.

ஹம்ஸாநந்தி என் பேச்சைத் தடுத்து, "நீங்கள் அப்படியெல்லாம் பேசப்படாது. புருஷோத்தமராகிய உங்களை நான் இன்று கண்டு அளவளாவியதால், என் வாழ்க்கை புனிதமாகியது. என் மனத்தை அழுத்தியிருந்த கவலை சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தது. கலையமுதென்று கருதியே நேயங் கொண்டு உரையாட வந்த உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று ஆறுதல் தோன்றக் கூறி மேலும் ஏதோ பேச முயன்று முடியாமல் நிறுத்தினாள்.

நான், "ஹம்ஸாகாந்தி, நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். அவ்விதம் போவதற்கு முன் ஒரு வேண்டுகோள். துயர வாழ்க்கையில் ஆழ்ந்திருக்கும் மக்களின் மனதை ரஞ்சிக்கச் செய்யும் லலித கலைகளுக்கெல்லாம் நாயகமாயிருக்கும் கலாவாணியாக உன்னுடன் நான் விரும்பும்போதெல்லாம் கலைகளைப்பற்றிச் சல்லாபம் செய்து மகிழ எனக்கு அனுமதி யளிக்கவேண்டும். மக்களுக்கு இன்ப உணர்ச்சியூட்ட—வாழ்க்கையில் உற்சாக மூட்ட—கோகில கானம் பொழியும்—ஆனந்த நாட்டியமாடும் உன் வாழ்க்கையிலும் இன்பமும் உற்சாகமும் ஏற்பட வேண்டுமென்றும், உன் எதிர்காலம் ஏற்றமுடையதா யிருக்கவேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நாளை நாடெங்கும்—வீடெங்கும் பால் பொங்கப் போகிறதல்லவா! அதுபோல, உன் வாழ்க்கையிலும் மகிழ்ச்சி பொங்கவேண்டும். பனியும் பிணியும் நீங்க தெற்கேயிருந்து சூரியன் வடக்கே வருவதுபோல், உன் வாழ்க்கையைப் பிடித்துள்ள துன்பமும் தொல்லையும் நீங்க ஆனந்த சூரியன் உன் பக்கம் வரட்டும். உத்தராயன புண்ணிய காலம் செடி கொடிகளுக்குப் புத்துயிர் அளிப்பதுபோல உன் வாழ்வுக்கும் புத்துயிர் அளிக்கட்டும். நீ இதுவரை பட்ட கஷ்டங்களும் அனுபவித்த சோதனைகளும், தக்ஷணாயனத்தில் பட்ட கஷ்டமாகக் கழியட்டும். உத்தராயனத்தில் உலகமெல்லாம் செழிப்படைவதுபோல், உன் வாழ்வும் செழிப்படைந்து புதுமையும் பொலிவும் பெறட்டும் என்று தூய மனதுடன் வாழ்த்துகிறேன்" என்று மனப்பூர்வமாக மொழிந்தேன். கடைசி வார்த்தைகள் என்னையும் அறியாமலே என் வாயிலிருந்து வெளிவந்தன.

ஹம்ஸாநந்தி நாணத்தால் ஒரு கணம் தலையைத் தாழ்த்தினளாயினும், அடுத்த கணம் தன் உள்ளத்தின் உணர்ச்சியை அடக்கமாட்டாது, முல்லை நகை செய்து, "நாளை பொங்கல் புதுநாளென்றால், இன்றேதான் என் ஆத்ம சூரியன் தக்ஷிணாயனத்திலிருந்து உத்தராயனத்துக்கு வந்து தரிசனங் கொடுத்து என் உள்ளக் கமலத்தை மலரவைத்து விட்டானே! என் நெஞ்சத் தாமரையைச் சூழ்ந்திருந்த துன்பப் பாசியைப் போக்கி வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்க வைத்து விட்டானே! மக்களது சுக போகங்களுக்கு அடிகோலும் போகிப் பண்டிகையன்று என் ஜீவ சூரியன் வலிய வந்து ஆட்கொண்டு போகம் புணர்த்த முன் வந்து விட்டானே! அந்த ஆதவன் என்னோடு சல்லாபம் செய்வதற்கு அநுமதி வேறு கேட்க வேண்டுமா? என் அநுமதியை எதிர்பாராமலே உள்ளக் கமலக் கபாடத்தைத் திறந்து உட்புகுந்த கள்வன், உடன் கூடிக் களிப்பதற்கு அநுமதி கேட்பதுபோல் பாவனை செய்வது, அவனது பல் மாயங்களில் ஒன்று போலும்!" என்று கூறி என்னை அணுகித் தன் தளிர் கரங்களால், என் கைகளைப் பற்றினள்.

அப்போதுதான் என் உள்ளம் என்னை அறியாமலே—என் உத்தரவைக் கேளாமலே, ஜாஜ்வல்யமான உடல் அழகுடன் கலை பழகும் கொப்பளிக்கும் அக்கோமளாங்கியிடம் சரண் புகுந்தது தெரிந்தது. அதற்கு அப்புறம் அதை மீட்டுக்கொள்ள எனக்குச் சக்தியேது? ஆகவே, நான் அன்னையின் முத்தமன்றிப் பிற பெண்டிரின் முத்தமறியாதிருந்த ஹம்ஸாநந்தியின் செவ்விய அதரத்தில் முத்தம் வைத்தேன்.

முற்றுப்பெற்றது.

அச்சில் இருப்பவை

ஆகஸ்டு தியாகி

ஆகஸ்டு இயக்கத்தில் அகஸ்மாத்தாகச் சிறைப்பட்ட ஒருவன் விடுதலையானதும் பெரிய தியாகியெனப் பம்மாத்துப் பண்ணிப் பட்டம் பதவிகளை அடைந்து அட்டகாசஞ் செய்து அரசியலை ஆபாசமாக்கும் வஞ்சகச் செயலை இந் நாவலில் 'ஜீவா' படம் பிடித்துக் காட்டுகிறார்.

சமூக விரோதி

பெரிய மனிதர்களென்றும் பொதுநலத் தொண்டர்களென்றும் சொல்லிக்கொள்ளும் சிலர் எப்படி மக்களை தங்கள் வெளிவேஷத்தால் ஏமாற்றிக் கள்ளச் சந்தையாளர்களாகவும் காமுகர்களாகவும் கயவர்களாகவும் அந்தரங்கத்தில் அக்கிரமம் புரிந்து சமூகத் துரோகிகளாக மாறுகிறார்கள் என்பதை 'ஜீவா' இந் நாவலில் வெளியிட்டிருக்கிறார்.

மணமானவள்

ஏற்கனவே ஒருவனுக்கு மனைவியான ஒருத்தியைப் பேரழகியாயிருப்பதால், தனக்கு உரிமையாக்கிக்கொள்ள நினைத்த ஒரு செல்வக்குமாரன், அவளை கலியாணஞ்செய்து கொள்ள முயல்வதும், யுத்த களத்தில் செத்துவிட்டான் என எல்லோரும் நினைத்திருந்த உண்மைக் கணவன் கடைசி நேரத்தில் வந்து விடுவதும், தாய் நச்சரிப்பினாலும் அக்கம் பக்கத்தாரின் ஏச்சுப் பேச்சினாலும் சலனமுற்றிருந்த கதாநாயகி கணவனைக் கண்டதும் உடன் சென்று விடுவதுமான கட்டங்கள் படிக்க உணர்ச்சி ஊட்டும்.

இசைவாணி

இசையுலகில் இணையற்று விளங்கிய பெண்மணி யொருத்தியின் அந்தரங்க வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட சிறந்த நாவல். பலமுறை படித்தாலும் தெவிட்டாத வாழ்க்கைச் சித்திரம்.

மான பங்கம்

கலியாணமாகப் போகும் சமயத்தில் உள்ளூர்க் கோவிலில் நடந்த திருவிழாவைப் பார்க்கப் போன இடத்தில் திடீரென ஏற்பட்ட இந்து முஸ்லீம் கலகத்தில் கதாநாயகி பெற்றோரைப் பிரிந்துபோய் போக்கிரிகள் சிலரிடம் தனியாகச் சிக்கிக்கொண்டு மான பங்கமடைவதும் ஊரார் தூற்றியும் காதலன் அவளையே மணந்து வாழ முன் வருவதும் ஆனாலும் பிறரால் கற்பழிக்கப்பட்ட தன்னைக் காதலனுக்கு ஒப்படைக்க விரும்பாமல் வீட்டை விட்டு வெளியேறி வேற்றாருக்குப் போய்விடுவதும் காதலன் அவளைத் தேடியடைய முயல்வதுமான கதைப்போக்கு அற்புதம்.

தங்கசாலைத் தெரு

நாடக நடிகனொருவனுடைய காதல் வாழ்க்கையையும் அவனை நம்பிப் பின்வந்த செல்வந்தளின் செல்விபொருத்தி அனுபவிக்கும் கஷ்டங்களையும் துயரங்களையும் 'ஜீவா' உள்ளமுருக வருணித்திருக்கிறார். தங்கசாலைத் தெரு தாசிகளின் மோச நடவடிக்கைகளும் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

புத்தம் புதிய புத்தகங்கள்

பாடகியின் மகள் — அணா 4

போலி கௌரவத்துக்கு அடிமைப்பட்ட! இளம் பெண்ணொருத்தியின் மனப்போராட்டத்தைச் சித்திரிக்கும் சிறந்த கதை.

கவிஞனின் காதலி — அணா 4

கவிதையுலகில் மூழ்கிய தன் காதலன் தன்னைக் கவனியாததால் உள்ளத் துடிப்புக்கொண்ட பெண், காதலனின் மாணவனொருவன் பால் மோகம் கொள்கிறாள். ஆனால் அவன் அவளைத் தழுவிக் கொள்ளப் போகையில்............?

வேனில் வந்தது! — அணா 6

பெற்றோர் மறுமணம் செய்ய முன்வந்தும் சமுதாய சம்பிரதாயத்தைக் குலைக்க விரும்பாத ஒரு விதவைப் பெண் வயது கடந்த நிலையில் முன் கலியாணம் செய்து கொள்ள மறுத்தவனையே சேர விரும்பும் விந்தையை இவ் வேனில் கதையில் விவரித்திருக்கிறார் 'ஜீவா'.

அம்மான் மனைவி — அணா 6

இரவு நேரங்களில் மனம் பைசாசம் போல் வெறி கொண்டு அலைவதை, தனக்குச் சிகிச்சை செய்த அம்மான் மனைவியையே அணைய விழையும் வாலிபன் வாயிலாக வெளிப்படுத்துகிறார் ஜீவா.

சந்தேகம் அணா 6

போலீஸார் கம்யூனிஸ்டு எனச் சந்தேகித்துத் தூக்கும் தாமோதரனை, தஞ்சமடைந்த வீட்டுத் தலைவனும் சந்தேகிக்கிறான் தன் இள மனைவியுடன் அவன் பேசுவதைப் பார்த்து. சர்வமும் சந்தேகம்.

இக் கதைகள் ஒவ்வொன்றும் ஆண் பெண் வாழ்வில் பொதிந்துள்ள அந்தரங்கங்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட கதைகளாகும்.

ரூ. 1—10—0 மணியார்டர் செய்தால் தபால் செலவின்றி இந்த ஐந்து புத்தகங்களும் அனுப்பி வைக்கப்படும்.

—(*)—

அழகாம்பிகை

அழகிய கதைத் தொகுதி

ஒவ்வொரு கதையும் உயர்ந்த உயிர்ச் சித்திரம். 'ஜீவா' நவீன இலக்கிய உக்திகளை நன்கு கையாண்டு சித்திரித்திருக்கிறார்.

விலை ரூ. 1-4-0.

(தபால் செலவு தனி.)

கண்ணழகி

அழகிய காதல் சித்திரம்

அழகிய மூவர்ண அட்டைப்படத்துடன் திகழ்வது

தான் விரும்பிய காதலனை மணஞ் செய்து வைக்காத தந்தையை விட்டு வெளியேறிய ஒரு பெண் தகப்பன் [illegible] போனபால் மீண்டும் காதலனுடன் திரும்பிவந்து மன்னிப்புக் கோருவதும், ஆனால், தகப்பன் அவளை ஏற்க மறுத்து ஒதுக்குவதுமான கதைப் போக்கு நாவலில் நவீன முறையில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

விலை ரூபா 1-8-0

(தபால் செலவு தனி.)

★

பெற்றோருக்கு அடங்காதவன்!

உற்றாரால் உதாசினப் படுத்தப்பட்டவன்!

ஊராரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானவன்!

அரசாங்கத்தால் பயங்கரவாதி எனச்
சந்தேகிக்கப் பட்டவன்!

ஒரு பெண்மணியால் மாறி விடுகிறான்!

—(*)—

பூங்கொடி

(உணர்ச்சி மிகுந்த உயரிய காதல் நாடகம்)

"ஜீவா" எழுதியது

—(*)—

வெகு விரைவில் வெளிவருகிறது.